July 2015

MUTA

மூட்டா இதழ்

MUTA BULLETIN

Vol:14 No:3



VS MEMORIAL DAY 13.07.2015

Madurai

Nagercoil

மூட்டா இதழ்

ஜூலை 2015

MUTA

ஆசிரியர் குழு

ஆசிரியர்:

ப. த. பால்பாண்டியன்

மின் அஞ்சல்:
pandian58@gmail.com

கைபேசி:
94428 85510

நிர்வாக ஆசிரியர்:

ஜே.ஆர்.வி. எட்வர்ட்

மின் அஞ்சல்:
jrve@rediffmail.com

கைபேசி:
94436 05698

உறுப்பினர்கள்:

எஸ். இராமசுந்தரம்
94862 26502

ஜி. காசிராஜன்
9443969587

கே. கணேசன்
94868 64990

முகவரி:

தலைமை அலுவலகம்:

6, காக்கா தோப்பு தெரு
மதுரை - 625 001.

தொலைபேசி:
0452 - 2341272

திருநெல்வேலி அலுவலகம்:

90, சிந்துபூந்துறை
திருநெல்வேலி - 627 001.

தொலைபேசி:
0462-2335088

நாகர்கோவில் அலுவலகம்:

1, வடக்கு ரத வீதி
நாகர்கோவில் - 629 001.
தொலைபேசி:
04652-228562

உள்ளே...

	பக்கம்
தலையங்கம்	3
எண்ணம்	4
தலைவர் மடல் ...	5
பொதுச் செயலாளர் கடிதம் ...	8
எரிமலை ஜேசுவுடன் நேர்காணல்	11
அப்துல் கலாம் என்ற அற்புத மனிதர்	16
படைப்பாளுமை மிக்க ஜெயகாந்தன்	18
ஒன்பதாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் *மூட்டா* பேராசிரியர்களின் புத்தகங்கள் வெளியீடு	20
ஊழல் என்றால் என்ன?	22
மூட்டா உறுப்பினர் பயிற்சி முகாம் - 2015	25
இதெல்லாம் ஒரு பொழப்பா!	30
கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்	32
வாட்ஸ் அப் விருந்து	33
நில அதிர்வு	35
நேர்மறை சிந்தனை	36
An Open Letter to the Prime Minister:	37
மெல்லச் சாகும் கல்வி சார்ந்த அறம்	40
உலக புத்தக தினம்	41
போராட்ட களத்தில்...	42
மறைந்து போன மாதிரிக் கல்லூரிகள்	46
மூட்டா சேமநலநிதித் திட்டம்...	50
ஐ.ஐ.எம். நிறுவன மசோதா அவசியமானதா?	51
பேராசிரியர் வி. சண்முகசுந்தரம் நினைவுநாள் நிகழ்ச்சிகள்	52
நான்காம் மண்டலம் சார்பில் எம். எஸ். வி. என்ற "விஸ்வ" நாதம்	56
மூட்டா உடற்கல்வி இயக்குநர்களுக்கு ம.சு. பல்கலைக்கழக சிறப்பு விருதுகள்	57
காசில்லாம இருந்தா ஏன் அப்பா ஆகணும்...?	58
மூட்டா மூன்றாவது கல்வி மாநாடு...	64

கார்ட்டூன் பக்கம்

நன்றி: *விடுதலை*, 08 ஜூன் 2015



நன்றி: *புதிய தலைமுறை*, 30 ஜூலை 2015

தலையங்கம் "வியாப" வியாபார அதிர்ச்சிகள்!

அன்று -
வியாபாரம் செய்ய வந்தவர்கள்
நாட்டைப் பிடித்தார்கள்.
இன்று -
நாட்டைப் பிடித்தவர்கள்
வியாபாரம் செய்கிறார்கள்!

என்ற கவிதை வரிகள்தாம் மத்தியப்பிரதேச மாநில 'வியாப'த்தை நினைக்கும்போது நினைவில் வருகிறது. 'ஊழல் வியாபாரமாவது செய்து விட்டுப் போ; ஏனிந்த கொலை பாதகச் செயல்?' என்று விரக்தியில் கேட்கத்தோன்றுகிறது. வெள்ளையர்களே பரவாயில்லையோ என்று அடிமை நாட்டுக்கு புகழாரம் சூட்டும் நிலையும் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு அரசுத் தேர்வுவாரியம் என்பது தகுதியுள்ள, திறமையான மாணவர்களைத் தெரிவு செய்வதும், பணியாளர்களை நியமிப்பதும் என்ற நிலை மாறி உலகத்தின் எந்த நாட்டிலும் கேள்விப்படாத அநியாயமும், அசிங்கமும், அதிர்ச்சி நிகழ்வுகளும் மத்தியப் பிரதேசத்தில் அரங்கேறி தொடர்ந்து என்ன நடக்குமோ என்ற பீதியை உருவாக்கியிருக்கிறது.

உயர்நீதிமன்றத்தின் கண்காணிப்பில் சிறப்பு விசாரணைக் குழு நடத்திய விசாரணையில் ஈடுபட்டவர்களும், குற்றம் சாட்டப்பட்டவர்களும், சாட்சிகளும் தொடர்ந்து மர்மமான முறையில் உயிரிழப்பது என்பது எவராலும் ஜீரணிக்க முடியாதது. வியாபம் முறைகேட்டால் பலனடைந்த மாணவர்கள் யார் யார் என்று கண்டுபிடிக்க முனைந்த ஜபல்பூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் அருண் ஷர்மா மர்மமான முறையில் இறந்தது நியாயஉணர்வு கொண்டோரை நிலைகுலையச் செய்துள்ளது.

மாநில முதல்வராக சிவராஜ் சிங் சௌகான் பதவியேற்றபின் பல துறைகளில் மத்தியப்பிரதேச மாநிலம் முன்னேறியதாக பட்டியலிடப்படுகிறது. வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்பது தர்மங்களையும், நியாயங்களையும் உள்ளடக்கியதுதான் என்பதை அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் உணர்த்த வேண்டியிருக்கிறது. நீதித்துறை தலையீட்டின்பேரில் சிபிஐ விசாரணை தொடங்கி பலர்மீது வழக்குப் போடப்பட்டிருப்பது வரவேற்கத்தகுந்தது என்றாலும் இதுவும் பத்தோடு ஒன்று பதினொன்றா, குற்றவாளிகள் மீதுள்ள வழக்குகளைத் துரிதப்படுத்தி அவர்களை நீதிமன்றங்கள் தண்டிக்குமா, இழந்த விலைமதிப்பற்ற உயிர்களுக்கு இந்த மாநில, மத்திய அரசுகள் என்ன பதில் கூறமுடியும் அல்லது என்ன யோக்கியதை இவர்களுக்கு இருக்கிறது? போன்ற கேள்விகள் இந்திய மக்களின் மனதுகளில் உறுத்திக்கொண்டே இருக்கின்றன. ஊழலை அறவே அகற்றிவிடுவோம் என்று முழங்கியவர்களின் லட்சணம் இதுதானா?

யோகா

நினைவாற்றல், மன ஆற்றல், சிந்தனைத் திறன் முதலானவற்றை மேம்படுத்தும் ஓர் அற்புதக் கலை யோகா எனும் மனவளக் கலை. இது வெறும் கலை மட்டுமல்ல; இரத்த அழுத்தம், உடல் வலிகள், ஆஸ்துமா போன்ற பல நோய்களுக்கான நிவாரணியாய் விளங்கும் மருத்துவ அறிவியலும் கூட. உடல் நலத்துக்கும் மனநலத்துக்கும் அரணாய் விளங்கும் யோகா உலகுக்கு இந்தியா வழங்கியிருக்கும் அருங்கொடை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி யோகாவுக்கு உலக அங்கீகாரம் பெறும் முயற்சியில் இறங்கி வெற்றி பெற்றிருக்கிறார். மோதியின் வேண்டுகோளை ஏற்று ஐக்கிய நாட்டு நிறுவனமானது ஜூன் 21-ஆம் நாளை **உலக யோகா தின**மாக அறிவித்திருக்கிறது. முதல் யோகா தினக் கொண்டாட்டத்தை (2015) திருவிழாவாகக் கொண்டாடியது மத்திய அரசு. தலைநகர் டெல்லியில் பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சிக்கு மத்திய அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. பிரதமர், அமைச்சர்கள், உயரதிகாரிகள் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் திரளாய் கலந்துகொண்ட அந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்களும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. "இந்தியாவில் செய்வோம்" என்ற கோஷத்துடன் வலம் வரும் பிரதமர் மோதியின் மனவிருப்பத்திற்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மக்கள் அமர்ந்து யோகா செய்வதற்கான விரிப்புகள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது நகைமுரண் தான்! எது எப்படியோ, டெல்லி யோகா நிகழ்வை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறச்செய்து பெருமிதம் அடைந்திருக்கிறது அரசு. யோகாவை பிரபலப்படுத்துவதை விட யோகாவின் பெயரால் தங்களை பிரபலப்படுத்துவதே ஆள்வோரின் நோக்கமாக இருந்திருக்கிறது.

யோகா பயிற்சி என்பது அரசியல் மாநாடல்ல, கும்பலாக நடத்துவதற்கு! நுட்பமாக செய்யப்படவேண்டிய பயிற்சி. எல்லோருக்கும் எல்லாவகை பயிற்சிகளும் பொருத்தமாக அமைவதில்லை. யோகாவைப் பரப்ப முயல்பவர்களுக்கு இந்த எதார்த்தம் தெரியாதது வியப்பாக இருக்கிறது. தவிர, யோகா என்பது ஒருநாள் கூத்தாக நடத்தவேண்டிய பயிற்சியும் அல்ல.

யோகா தினத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் யோகா நிகழ்வு நடத்தப்படவேண்டும் என்ற மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் அறிவிப்புக்கு கடும் எதிர்ப்பு எழவே, அமைச்சகம் சற்று பம்மிக்கொண்டது. மதச் சிறுபான்மைக் குழுவனர் சிலர் வெளிப்படையாகவே யோகாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த எதிர்ப்பு தேவையற்றது. யோகா மதச்சார்பற்றது என்ற சில மத்திய அமைச்சர்களின் வாதம் சரியானதே. மதச்சார்பற்ற யோகாவானது மதச் சிமிழுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது ஓர் கசப்பான உண்மை. மதமாற்றத்திற்கான ஒரு கருவியாகவும் சில நாடுகளில் யோகா பயன்படுத்தப்படுவதும், அதனால் சில நாடுகள் யோகாவை தடை செய்திருப்பதும் கூட உண்மைகள். இதற்கான தீர்வு யோகாவை மதத்தின் பிடியிலிருந்து விடுவிப்பது தானேயன்றி, புறக்கணிப்பதன்று.

யோகா, தினமும் கடைபிடிக்கவேண்டிய வாழ்க்கை முறை. பிரதமர் மோதி இந்த உண்மையை அறிந்தவர். அதன்மூலம் நன்மை அடைந்தவர். தம் அரசு மீதும், சக அமைச்சர்கள் மீதும், தமக்கு நெருக்கமானவர்கள் மீதும், தம் கட்சி ஆளும் மாநிலங்களின் அமைச்சர்கள் பலர் மீதும் கடும் குற்றச்சாட்டுகள் எழுந்துகொண்டிருக்கையிலும் மௌனம் கலையாமல் மனஉறுதியுடன் இருக்கும் ஆற்றலை யோகாவால் பெற்றிருக்கிறார் அவர். எத்துணை சிறந்தது யோகா!

- ஜே.ஆர்.வி. எட்வர்ட்

தலைவர் மடல் ...

அன்பார்ந்த மூட்டா தோழர்களே,

வணக்கம்.

இந்த மடல் மூலம் தங்களுடைய கவனத்திற்கும் சிந்தனைக்கும் சில விசயங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

நம் நாடு 69-ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் வேளையில் தேசத்தில் நடக்கும் சில நிகழ்வுகள் மிகுந்த கவலையளிப்பதாக உள்ளன. முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின்போது நடைபெற்ற 2G ஊழல், S-Band ஊழல், நிலக்கரி சுரங்க ஊழல், ஆதர்ஷ் அடுக்குமாடி ஊழல், காமன்வெல்த் விளையாட்டு ஊழல் ஆகியவற்றின் தொடர்ச்சியாக தற்போது தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் IPL சூதாட்ட வழக்கு மற்றும் அந்நிய செலாவணி மோசடி வழக்கில் சிக்கியுள்ள லலித் மோடிக்கு உதவிய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா ஆகியோரின் விவகாரம், மத்திய பிரதேசத்தில் 50-க்கும் அதிகமான உயிர்களை பலிகொண்ட வியாபம் ஊழல், மகாராஷ்டிரா மாநில பி.ஜே.பி. அமைச்சர்களின் ஊழல், ஜார்கண்ட் மாநிலத்தின் பொது வினியோக முறையில் ஏற்பட்டுள்ள 36,000 கோடி ரூபாய் ஊழல் என பல ஊழல்கள் நம் இந்திய தேசத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளன. பாராளுமன்றம் செயல்படாமல் முடங்கியுள்ளது.

2015 ஏப்ரல் 1-ஆம் தேதியன்று தனியார் மற்றும் கார்ப்பரேட்டுகள் வைத்திருக்கும் வரிபாக்கி 8 லட்சத்து 27 ஆயிரத்து 680 கோடி ரூபாய் என்று மாநிலங்களவையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 17 தனி நபர்கள் மட்டும் வைத்திருக்கும் வரியாக்கி ரூ. 2.14

லட்சம் கோடி. 35 நிறுவனங்களின் வரிபாக்கி 90,568 கோடி ரூபாய். 10 கோடி ரூபாய்க்கு மேல் வரிபாக்கி வைத்துள்ளவர்களின் எண்ணிக்கை 4,692 என பட்டியல் நீள்கின்றது. இந்த தனியார் நிறுவனங்கள் ஊழியர்களுக்கு முறையாக ஊதியத்தைத் தர தயங்குவதுடன் ஊழியர்களின் ஊதியத்தையும் உயர்த்த மறுத்து வருகின்றவையாகும். 'குளோபல் வெல்த் 2015' அறிக்கையின்படி 640 கோடி ரூபாய்க்கு அதிகமான சொத்துக்கள் உள்ள இந்திய நபர்களின் (2013-ஆம் ஆண்டு எண்ணிக்கை 284-லிருந்து (2014-ஆம் ஆண்டு) 928 ஆக உயர்ந்துள்ளது. மத்திய அரசின் கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதரவு நவீன பொருளாதார கொள்கையே இதற்கு காரணம். 'The Rich become Richer & The Poor become poorer' என்பதற்கு இது எடுத்துக்காட்டு. இதுதான் பிரதமர் மோடி அவர்களின் 'Make in India'! மந்திரம் பாருங்களேன்!

பிரதமர் மோடி தலைமையிலான தற்போதைய மத்திய அரசு நவீன தாராளமயக் கொள்கைகளை அசுர வேகத்தில் அமுல்படுத்த துடித்துக்கொண்டிருக்கிறது. தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிலாளர்களுக்கு பாதகமாக மாற்றுவது, நிலம் கையகப்படுத்தும் சட்டம் மூலமாக, விவசாயிகளை வஞ்சிப்பது, ரயில்வே, பாதுகாப்புத்துறை, LIC உள்ளிட்ட பொதுத்துறைகளை தனியாரிடம் தாரை வார்ப்பது, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரி குறைப்பு, பொதுமக்கள் நலனை தனியாருக்கு காவுகொடுக்க வகைசெய்யும் புதிய மோட்டார் வாகனச் சட்டம் ஆகியவற்றின் மூலம் கொஞ்சநஞ்சமுள்ள மக்கள் உரிமையைப் பறித்து தனியார் கார்ப்பரேட்டுகளுக்கு வழங்க எத்தனித்துக்கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஆதரவிலான எதிர்கட்சிகளின் போராட்டங்கள் பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் தீவிரமடைந்துள்ளன. தொழிலாளர் வர்க்கமும், விவசாயிகளும், நடுத்தர மக்களும் இந்திய இறையாண்மையைக் காக்க, மோடியின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து செப்டம்பர் 2 அன்று நாட்டையே ஸ்தம்பிக்க வைக்கும் வேலைநிறுத்தம் மற்றும் மறியல் போராட்டம் போன்றவற்றை நடத்தவுள்ளன. அவற்றிற்கு நம் ஆதரவைத் தெரிவிப்பதுடன் அந்த தேசபக்த போராட்டத்தில் நாமும் கலந்து கொள்வது அவசியம் ஆகும்.

பொறுப்பேற்று 15 மாதங்களாகியும் மத்திய அரசு உயர்கல்வி உள்ளிட்ட தனது கல்விக் கொள்கையை இதுவரை அறிவிக்கவில்லை. இயங்காத துறையாக மனிதவள மேம்பாட்டுத்துறை உள்ளது. கல்விக் கொள்கையை இறுதிப்படுத்துவதற்குமுன் உயர்கல்வி சம்பந்தமான *அய்ஃபக்டோ*வின் கருத்துக்களை மனிதவள மேம்பாட்டுத்துறை கேட்கவேண்டும். *அய்ஃபக்டோ* கோரிக்கைகளைப் பற்றி கவலைப்படாமல் *அய்ஃபக்டோ* பொறுப்பாளர்களின் வேண்டுகோளை தொடர்ந்து உதாசீனப்படுத்தி வரும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரின் போக்கு கடும் கண்டனத்திற்குரியது. இதற்கிடையில் அமைச்சரின் கல்வித்தகுதி சம்மந்தமான சர்ச்சையும் தொடர்கிறது. *அய்ஃபக்டோ*வின் கோரிக்கைகள் மீது மத்திய அரசு மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க வலியுறுத்தி கடந்த ஆகஸ்டு 7 அன்று அகில இந்திய அளவில் ஒரு நாள் வேலை நிறுத்தம் மற்றும் டெல்லியில் உண்ணாவிரதப் போராட்டம் சிறப்பாக

நடைபெற்றுள்ளன. தமிழகத்தில் அன்றைய தினம் JAC சார்பில் 1200-க்கும் அதிகமான கல்லூரி பேராசிரியர்கள் கலந்துகொண்ட உண்ணாவிரதப் போராட்டம் சிறப்பாக நடைபெற்றது. போராட்டத்தில் பங்கேற்ற அனைத்து JAC உறுப்பினர்களுக்கும், நம் மன்ற உறுப்பினர்களுக்கும் பாராட்டுக்கள். தொடர்ந்து *அய்ஃபக்டோ* மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நம்முடைய பேராதரவை நல்குவோம்.

தமிழகத்தில் இன்று அனைத்துத் துறைகளிலும் லஞ்சம் மற்றும் ஊழல் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. லஞ்சம் மற்றும் ஊழல் கண்காணிப்புத்துறை தமிழகத்தில் செயல்படுகிறதா என்றே சந்தேகம் எழுந்துள்ளது. லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கான பல்வேறு இயக்கங்களும் தற்போது மந்த நிலையிலேயே உள்ளன. இதற்கிடையில் மதுவை ஒழிப்பதற்கான போராட்டம் தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளது. மதுவின் கொடுமைக்கெதிராக பெண்கள், சமூக ஆர்வலர்கள் வாலிபர்கள் ஆகியோரின் போராட்டம் தமிழகத்தின் பல பகுதிகளிலும் தன்னெழுச்சியாக நடந்து வருகிறது. மாணவர்களின் போராட்டமும் தமிழகம் முழுவதும் தீவிரமடைந்துள்ளது. "உடலைக் கெடுக்கும் மதுவையும் போதை மருந்துகளையும் மருத்துவம் நீங்கலாக ஏனைய நோக்கங்களுக்கு பயன்படுத்தாமலிருக்க மதுவிலக்கு கொள்கை நம்முடைய அரசுகள் கடைபிடிக்கவேண்டும்" என்ற இந்திய அரசியல் சட்டத்தின் அரசுக்கான வழிகாட்டுக் கொள்கை பிரிவில் 47-ஆவது பிரிவை இனிமேலாவது அனைத்து மாநில அரசுகளும் குறிப்பாக தமிழக அரசு செயல்படுத்தவேண்டும். குடி மூலமாக வருவாயை பெருக்குவதும் மக்களை மதுவுக்கு அடிமையாக்கி, சிந்திக்க விடாமல் தடுப்பதும் ஊழல் அரசுக்கெதிராக அவர்கள் அணி திரண்டு போராடாமல் பார்த்துக்கொள்வதும் தான் டாஸ்மாக்கின் நோக்கம். எனவே மதுவிற்கெதிரான போராட்டம் ஊழல் ஒழிப்பிற்கான போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும். எனவே மது ஒழிப்பிற்கான போராட்டத்திலும், லஞ்ச ஊழலுக்கெதிரான போராட்டத்திலும் மக்களோடு மக்களாய் நாமும் இணைவது அவசியம்.

தோழர்களே! மத்திய மாநில அரசுகளின் மூர்க்கமான தாக்குதல்கள் நம் மீது தீவிரமாகி வருகின்ற வேளையில் நம்முடைய போராட்டங்களையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர், அரசு ஊழியர், மாணவர்கள் என அனைத்து பகுதி உழைக்கும் மக்களும் ஒன்றுபட்டு அரசுகளின் மக்கள் விரோத கொள்கைகளுக்கெதிராக போராடும் காலம் வெகு தொலைவிலில்லை. அத்தகைய தருணத்தில் நாம் மிகுந்த பலத்தோடு போராட்டக்களத்தில் நிற்பதற்கு நம்முடைய அமைப்பை மேலும் வலுவானதாக மாற்றுவது அவசியம். அதற்கான பணியை நாம் ஒவ்வொருவரும் சிறப்பாகச் செய்வோம்.

நன்றி.

தோழமையுடன்,
த. மனோகர ஜஸ்டஸ்
தலைவர்

பொதுச் செயலாளர் கடிதம் ...

கோரிக்கைகளுக்கான போராட்டங்களை முன்னெடுப்போம்!

அன்பார்ந்த ஆசிரிய நண்பர்களே!

வணக்கம். திருவாளர் மோடி தலைமையிலான மத்திய அரசு தனது ஓராண்டு ஆட்சிக்காலத்தை நிறைவு செய்துள்ளது. கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது அவர் நாட்டு மக்களுக்கு அளித்திட்ட உறுதிமொழிகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன், தாங்கள் கடைப்பிடிக்கும் கொள்கைகள் மூலம், சாதாரண மக்கள் மீது அனுதினமும் தாக்குதல் தொடுத்த வண்ணம் உள்ளனர்.

பெருமுதலாளிகளை குஷிப்படுத்தும் வகையில் வரிச்சலுகையளிக்கும் மோடி அரசு, மக்களை, நாட்டு நலன் கருதி எரிவாயுக்கான மானியத்தை கைவிடக் கோருகிறது. பன்னாட்டு முதலாளிகளை குஷிப்படுத்த தொழிலாளர் சட்டங்களை திருத்துகிறார்கள். ஊழியர் பென்சன் நிதியை சர்வதேச நிதிமூலதனத்திற்கு பந்திவைக்க ஆர்வம் காட்டுகிறார்கள். பொதுத்துறைப்பங்குகளை கூவிக்கூவி விற்கிறார்கள். பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை கொண்டு அனைத்து மக்கள் விரோதச் செயல்களையும் செய்கிறார்கள். எதிர்கட்சிகள் போராட்டம், விவசாயிகள் தற்கொலைகள் போன்ற பலத்த எதிர்ப்புகளையும் மீறி, ஏழை எளிய விவசாயிகளின் வாழ்வையும், கிராமப் பொருளாதாரத்தையும் சீரழித்திடும் நில அபகரிப்புச் சட்டத்தை நான்காவது முறையாக அவசரச் சட்டமாக கொண்டு வருகிறார்கள்.

இத்தகைய மக்கள் விரோதக் கொள்கைகளை கைவிட்டு, மக்கள் நலன் சார்ந்த கொள்கைகளை அமல்படுத்தக்கோரி, ஆளும் பிஜேபி யின் தொழிற்சங்கமான பி.எம்.எஸ். உள்ளிட்ட அனைத்து மத்தியத் தொழிற்சங்கங்களும் வரும் 02.09.2015 அன்று அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு

அழைப்பு விடுத்துள்ளது. கடந்த 19.06.2015 அன்று டெல்லியில் கூடிய அப்பெக்டோ தேசியச் செயற்குழுவும் 02.09.2015 அகில இந்திய வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள முடிவு செய்துள்ளது. 21.07.2015 அன்று கூடிய மூட்டா பொதுக்குழு, இந்த அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட முடிவு செய்துள்ளது.

மோடி அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சரும் அதே பாணியில் செயல்பட்டு வருகிறார். இனியும் யூ.ஜி.சி. 7 ஆவது ஊதிய நிர்ணயக்குழு அமைக்கப்படவில்லை. யூ.ஜி.சி. விதிமுறைகளுக்கான திருத்தங்களுக்கு அமைச்சகம் ஒப்புதல் அளிக்கவில்லை. அராஜகமான மத்தியப் பல்கலைக்கழகச் சட்டங்களை திருத்துகிறார்கள். இந்தியச் சூழலுக்கு பொருத்தமில்லாத தெரிவுமுறைப் பாடத் திட்டத்தை கொண்டு வந்து மக்கள் நலன் சார்ந்த கலைத் திட்டத்திற்கு (Curriculum) வேட்டு வைக்கிறார்கள். பதவியேற்றதிலிருந்து, நிலுவையிலுள்ள துறை வாரிக் கோரிக்கைகள் மீது, ஆசிரியர் சங்கங்களுடன் பேச மறுக்கிறார். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அப்பெக்டோவின் அறைகூவலுக்கு இணங்க, 07.08.2015 அன்று தமிழக கல்லூரி ஆசிரியர் ஜே.ஏ.சி. சார்பாக பட்டினிப் போராட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் உயர்கல்வித்துறை தொடர்ந்த செயலற்றுள்ளது. உதவிபெறும் கல்லூரிகளில் காலியாகவுள்ள (மே 2011 வரை) 3120 ஆசிரியர் பணியிடங்களை இனியும் முழுமையாக நிரப்பிட நடவடிக்கை எடுக்கவில்லை. உயர்கல்வித்துறையில் உள்ள பிரச்சனைகள் குறித்து எந்த நடவடிக்கையும் இல்லை. கடந்த 2008-2009-இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெரிவுமுறைப் பாடத் திட்டம் பெயரில் மட்டுமே உள்ளது. அதன் செயல்பாட்டைப் பற்றி முறையான பரிசீலனை இல்லை.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் முதல் கடைநிலை ஊழியர் வரையிலான நியமனங்களில் ஊழல் மற்றும் அரசியல் தலையீடு, தனியார் கல்லூரி ஆசிரியர் நியமனங்களில் ஊழல் குற்றச்சாட்டுகள் வந்த வண்ணமுள்ளன. சுயேட்சையான நிர்வாகம் போய், உயர்கல்வித்துறையின் ரிமோட் கட்டுப்பாட்டில் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. அனைத்து பல்கலைக்கழக ஆட்சிக்குழுக்களும் உயர்கல்வித்துறையின் செயலர் அறையில் நடைபெறும் அவலம். ½ மணி நேரம் நடைபெறும் ஆட்சிக்குழுக் கூட்டத்திற்காக பல்கலைக்கழக நிர்வாகமே, சென்னைக்கு பல லட்சங்கள் செலவு செய்து வரவழைக்கப்படுகின்றனர். துணை வேந்தரில்லாத மூன்று பல்கலைக்கழகங்களுக்கு உயர்கல்விச் செயலரே கன்வீனர் குழுவின் கன்வீனர். அந்த அளவிற்கு அதிகார மோகத்தில் உள்ளது உயர்கல்வித்துறை. இதை எதிர்த்து இயக்கம் நடத்திட ஜே.ஏ.சி. முடிவு செய்துள்ளது.

ஜே.ஏ.சி. டான்சாக் கோரிக்கைகள் குறித்து உறுதியளித்தபடி பேச்சுவார்த்தை நடத்தவோ ஏற்றுக்கொண்ட கோரிக்கைகள் மீது ஆணைகள் வெளியிடவோ,

உயர்கல்விச் செயலரும் கல்லூரிக்கல்வி இயக்குநரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 01.01.2006 க்குப் பின்னர் பணியில் சேர்ந்த ஆசிரியர்களின் பணிமேம்பாடு குறித்த ஆணை இனியும் அமலாகவில்லை. நாம் பெற்ற அந்த அரசாணை மீது நடவடிக்கை எடுக்கவும், இதர கோரிக்கைகள் மீது தக்க ஆணைகள் பெறவும் ஜே.ஏ.சி. டான்சாக் பொருத்தமான இயக்கங்களைத் திட்டமிடும். தொடர்ந்து பேசுவோம் தோழர்களே!

தோழமையுடன்,
எஸ். சுப்பாராஜு
பொதுச்செயலாளர்

மூட்டா இதழுக்கு படைப்புகள் அனுப்ப மற்றும் தொடர்புகளுக்கு...

பேரா. ப. த. பால்பாண்டியன்
(ஆசிரியர், மூட்டா இதழ்)
தலைவர், ஆங்கிலத்துறை,
ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருச்செந்தூர் - 628 216.
மின்னஞ்சல் : pandian58@gmail.com

முனைவர். ஜே.ஆர்.வி. எட்வர்ட்
(நிர்வாக ஆசிரியர், மூட்டா இதழ்)
கணிதத் துறை,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி,
நாகர்கோவில் - 629 003.
மின்னஞ்சல் : jrve@rediffmail.com

ஆணிவேர்கள்-5

மூட்டா உறுப்பினர்கள் போர்க்குணம் கொண்டவர்களாக இருப்பது காலத்தின் கட்டாயம்!

'எரிமலை' ஜேசுவுடன் நேர்காணல்

மூட்டா மூன்றாம் மண்டலத் தலைவராகவும், செயலாளராகவும், மூட்டாவின் முன்னணி வீரர்களில் ஒருவராக கல்லூரிப் பணியின் இறுதி நாள் வரை கொள்கை, கோஷங்களோடு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்களில் முக்கியமானவர் பேராசிரியர் ஜேசு. தூத்துக்குடி காமராசர் கல்லூரியில் முப்பது ஆண்டுகாலம் கல்விப்பணியாற்றிய ஜேசுவுக்கு 'எரிமலை' ஜேசு என்ற பெயரும் உண்டு. ஓய்விற்குப் பின் சிறிது காலம் ஒரு பள்ளியின் நிர்வாக அலுவலராகப் பணியாற்றி தற்சமயம் ஓய்வின்றி பல நூல்களை வாசித்து அறிவுப் பசியை ஆக்கப்பூர்வமாக தீர்த்துக் கொண்டிருக்கும் பேராசிரியரை கடந்த 08.02.15 அன்று இதழாசிரியர் ப.த. பால்பாண்டியன், மூன்றாம் மண்டலத் தலைவர் முனைவர் முருகேசன், மண்டல இணைச் செயலர் பேராசிரியர் ஹெய்ஸ் தாசன் ஆகியோர் திருநெல்வேலியில் அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினர். 'ஆணிவேர்கள்' பகுதிக்காக அல்லாமல் அவரின் உடல் நலம் பற்றி விசாரிக்கச் சென்றாலும், அவரிடம் கழித்த நேரம் முழுமையுமே மூட்டா பற்றியே இருந்தது.

◆ நீங்கள் கலந்து கொண்ட போராட்டங்களில் முக்கியமானது?

1985-ஆம் வருடம் நடந்த ஜேக்டீ போராட்டம். அரசு ஊழியர்களுக்கும், இடைநிலை ஆசிரியர்களுக்கும் சம்பள வேறுபாடு இருந்தது. அரசு ஊழியருக்கு இணையான சம்பளம் கேட்டு நடந்த போராட்டம். அரசாணையை தீயெரித்து நடத்திய போராட்டம் அது. கல்லூரி ஆசிரியர்களுக்கென்று பிரதான கோரிக்கைகள் எதுவும் கிடையாது. ஆனால் 38 நாட்கள் நடைபெற்றது. நவம்பர் 7 தீபாவளி கருப்பு தினமாக அனுசரித்தோம். சிறைச்சாலையில் 650 பேர் அடைக்கக்கூடிய வசதிதான் இருந்தது என்றாலும் 3000 பேரை அடைத்தனர். ஈரோட்டைச் சேர்ந்த கருப்பணன் என்ற ஆசிரியர் மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

அந்த எழுச்சிமிகு போராட்டத்தில் மறியல் செய்வதற்கு முன்பதிவு அவசியம்! இப்போராட்டத்தின் போதுதான் கல்லூரி ஆசிரியர்களுக்கு இடைக்கால நிவாரணம் கிடைத்தது. ஈட்டிய விடுப்பு முன்பெல்லாம் 3 நாட்கள் மட்டுமே இருந்தது. அது இப்போராட்டத்தின் விளைவாகத்தான் 13 நாட்களாக மாறியது. ஈட்டிய விடுப்பும், மருத்துவ விடுப்பும் இப்போராட்டத்தின் விளைவாகத்தான் கிடைத்தது. இப்போராட்டத்தின் போது நான் மண்டல துணைச் செயலராகவும், பேரா. வி. பொன்ராஜ் செயலராகவும் பணியாற்றினோம். பேரா. அ. ஜேம்ஸ் வில்லியம் *மூட்டா இதழின்* ஆசிரியராகவும், *ஜாக்டீ* பொறுப்பாளராகவும் அப்போது செயல்பட்டார். திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி பேராசிரியர் பாபு முன்னணி வீரர்.

◆ பிற போராட்டங்கள்...

நான் மண்டலச் செயலாளராக இருந்தபோது நான் ஏற்கனவே குறிப்பிட்ட 1985 *ஜாக்டீ* போராட்டமும் 1987-இல் நடந்த *ஐஃபக்டோ* போராட்டமும் குறிப்பிடத்தக்கவை. மேலநீலித நல்லூர் ப.மு. தேவர் கல்லூரியில் A.R. பொன்னையா 1987 போராட்டம் முடிந்த பின்னர் ஆசிரியர்களை கல்லூரிக்குள் அனுமதிக்கவில்லை. "காட்டுக்குள் கல்லூரியை வைத்துக் கொண்டு காட்டு தர்பார் நடத்தி தேச விரோத செயலில் ஈடுபடுகிறார்" என்று அறிக்கை வெளியிட்டோம். ஆசிரியர்களுக்கு அரியர்ஸ்ஸாக வந்த பணத்தை எடுக்கவிடாமல் அவர் தடுத்தார். கட்டாய வசூலில் ஈடுபட்ட அவரை எதிர்த்துப் போராடினோம். தீர்வு கண்டோம். அப்போது பேராசிரியர் ராஜீ பொதுச் செயலாளராக செயல்பட்டார்.

1983ம் வருடம் பிப்ரவரி 9 என்று நினைக்கிறேன். அப்போது தூய யோவான் கல்லூரியில் நடந்த போராட்டத்தில் கல்வி அமைச்சராக இருந்த அரங்கநாயகம், "நீங்கள் ஏன் போராடுகிறீர்கள்? உங்கள் வேலையை மட்டும் பாருங்கள்" என்று கூறினார்.

◆ நீங்கள் பணியில் எப்போது சேர்ந்தீர்கள்?

நான் 1967-ஆம் வருடம் கள்ளிகுளம் கல்லூரியில் (அப்போது கௌசானல் கல்லூரி என்று அழைக்கப்பட்டது) பணியில் சேர்ந்தேன். அக்கல்லூரி ஒரு பாதிரியார் பெயரில் நடைபெற்ற கிறித்துவக்கல்லூரி. 4 ஆண்டுகள் மட்டுமே நடைபெற்றது. நான் 1970-இல் காமராஜர் கல்லூரியில் நிரந்தரப் பணியில் அமர்த்தப்பட்டேன். அப்போதெல்லாம் 80:20 (80 சதவீதம் அரசு மானியம் 20 சதவீதம் நிர்வாக நிதி) என்ற நிலை இருந்தபோதும் சம்பளம் வழங்குவதில் காமராசர் கல்லூரியைப் பொறுத்தமட்டில் பிரச்சனை கிடையாது. ஆனால் "மூட்டாவில் சேராதே" என்று உத்திரவு அடிக்கடி வரும்.

◆ தாங்கள் ஏற்றுக்கொண்ட சங்கப் பொறுப்புகள் மற்றும் பிற பணிகள் - பணியில் இருந்த போதும், பணி நிறைவு பெற்ற பின்னரும்...?

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தில் BGVG மாதிரித்

திட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட அமைப்பாளராக இருந்தேன். முற்போக்குச் சிந்தனை கொண்ட டாக்டர் ரெக்ஸ் மாதாபட்டணம் என்ற ஊரில் நடத்திவரும் சற்குண சத்திரிய வித்யாலயாவில் (மேல்நிலைப் பள்ளி) நிர்வாக அலுவலராக பணிநிறைவு பெற்றவுடன் பொறுப்பேற்று செயல்பட்டேன்.

தற்சமயம் உடல்நலக்குறைவு ஏற்பட்ட காரணத்தால் வீட்டில்தான் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறேன். நேரமிருக்கும் போது புத்தகங்கள் வாசிக்கிறேன். ஃபிரான்ஸிஸ் ஃபுகுயாமா எழுதிய "The End of History and the Last man" என்ற புத்தகத்தை தற்போது வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

உடல்நலக்குறைவு ஏற்பட்டு, தேறியிருக்கிறது. நான் JAC இணைச் செயலராகவும், மண்டல இதழாசிரியராகவும் பணிபுரிந்து உள்ளேன்.

நான் 1997-ஆம் வருடம் பணி ஓய்வு பெற்றேன். மண்டல அளவில் இணைச் செயலராக பணிபுரிந்து பின்னர் மூன்று முறை மண்டலச் செயலராகவும், ஒரு முறை தலைவராகவும் பணியாற்றியுள்ளேன். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆட்சிப் பேரவையில் Floor Leader ஆக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன். என் நினைவில் உள்ளபடி 1970-களில் பல கல்லூரிகளில் ஆசிரியர் சங்கங்கள் MUTA என்ற பெயரில் உருமாற்றம் ஆனது. அதுவரை Staff Association என்ற பெயரில் தான் செயல்பட்டு வந்தன. அந்த சமயத்தில் பேராசிரியர்கள் M.C. சங்கரலிங்கம் செயலராகவும், பொன்ராஜ் இணைச் செயலராகவும் இருந்தனர். மறியல் நடந்தபோது நிறைய பேர் ஜெயிலில் அடைக்கப்பட்டனர். நாங்கள் சிலர் ஜெயிலில் உள்ளவர்களுக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கும் பணியில் இருந்தோம். சம்பளம் மிகவும் குறைவு. ரூ. 300 தேவைப்பட்டது. தங்கச் செயினை அடகு வைத்து தான் அந்தப் பணத்தைப் பெற்றேன்.

◆ **தங்கள் குடும்பம், பூர்வீகம் பற்றி...**

எனது பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம் சுரண்டை அருகில் சேர்ந்தமரம் என்ற ஊர். எனது தாய் தந்தையர் விவசாயத் தொழில் செய்தனர். எனக்கு இரண்டு மகன்கள். ஒரு மகள். மகள் உதவிப் பொறியாளராக பணியாற்றுகிறார். (தேசிய நெடுஞ்சாலைத்துறை) மருமகன் டாக்டர் மணிமொழியன் சொந்தமாக திருநெல்வேலியில் ஆஸ்பத்திரி வைத்துள்ளார். ஒரு மகன் ஃபோர்டு கார் கம்பெனியில் மென் பொறியாளர். மருமகள் M.D. படித்துவிட்டு பாலாஜி பல்கலைக் கழகத்தில் பேராசிரியையாகப் பணியாற்றுகிறார். இன்னொரு மகன் பட்டதாரி. சொந்தமாக வியாபாரம் செய்கிறார். மருமகள் ஆசிரியர் பயிற்சி முடித்துள்ளார். எனது மனைவி இடைநிலை ஆசிரியையாக இருந்து பணிநிறைவு பெற்றவர். எங்கள் குடும்பம் நிறைவான குடும்பம். என் இயக்கப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தனர்.

◆ **பிடித்த தலைவர்கள்...**

நிறைய பேர், குறிப்பாக, தோழர் P.K. இராஜன், எம். தர்மராஜ், கவிஞர் மீரா, பேராசிரியர்கள் சண்முகசுந்தரம், பேச்சி, ஃபிரட் ஜெயப்பிரகாஷ், இராஜு, பார்த்தசாரதி, ஜேம்ஸ் வில்லியம் ஆகியோர்.

◆ **அன்றும்... இன்றும்...**

அன்றைய காலகட்டத்தில் நிறைய போராட்டங்கள். போராட்ட வழிமுறை வித்தியாசமானவை. ஆர்வத்துடன் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். தேவை அதிகமாக இருந்தது. கல்லூரிகளில் மாதக்கணக்கில் சம்பளம் போடாத நிலைமை, சம்பளம் கொடுக்கும் கல்லூரிகளில் 20-ஆம் தேதி வரை பட்டுவாடா ஆகாத போக்கு. இயக்கப் பொறுப்பாளர்கள் தெருத்தெருவாய் அலைந்து பசையைக் காய்ச்சி போஸ்டர் ஒட்டி அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டியதிருந்தது. போராட்டங்களுக்கு அணிதிரட்ட வேண்டியிருந்தது.

இன்று நிலைமை வேறு. புதிய பொருளாதார, தாராளமயக் கொள்கைகளின் விளைவாக நுகர்வுக் கலாச்சாரம் நம்மிடையேயும் வளர்ந்து விட்டது. போராடினாலும் அரசு அசைவதாகத் தெரியவில்லை. மானங்கெட்டு, மரத்துப்போய் செயலற்றதாய் அரசுகள்

இருக்கின்றன. அன்றைய அரசுகள் நாம் பேசிய பேச்சுக்களை உன்னிப்பாக கவனித்தன. பேச்சுக்களைப் பதிவுசெய்தன. சில விஷயங்கள் போராட்டத்தின் விளைவாக நடந்தேறின. இன்றோ தொழிற்சங்கக் கடமையாற்றுவதே சிரமமான காரியமாக இருக்கிறது. அனைத்து மட்டத்திலும் வேலைப்பண்பாடு என்பதே குறைந்த நிலையில் உள்ளது. இந்தப் பின்புலத்தில்தான் சங்கப் பொறுப்பாளர்கள் எதிலும் சமரசம் ஆகாது பணியைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இழப்பையும் தாங்கமுடியாமல், கோரிக்கை மீது முன்னேற்றம் இல்லாது கடினமாக பணியாற்ற வேண்டிய நிலையில் உள்ளனர். இன்றைய இயக்கப் பணி என்பது மிகவும் சிரமமானது.

பேராசிரியர் ஜேசு நம்முடன் உற்சாகமுடன் கலந்துரையாடினார். அவர் ஓய்வு பெற்று பதினேழு ஆண்டுகள் ஆகிவிட்டாலும் அவரின் குரல் எரிமலைக் குழம்பாக நிர்வாகங்களின் நியாயமற்ற செயல்பாடுகளைக் குறிப்பிட்டுப் பேசும் போது வெடித்தது. அவரின் "Struggle Ahead; Struggle Ahead; March on... March on... ஜிந்தாபாத்... ஜிந்தாபாத்... மூட்டா ஜிந்தாபாத்" என்ற கம்பீரக் கோஷங்களும், அவரின் "மேளம் நாம தட்டுனாத்தான்... பொறுப்பாளர்கள் சாமி ஆட முடியும்" என்ற தொண்டர்களின் பங்கேற்பின் அவசியத்திற்கு அவர் சொல்லும் உதாரணமும், அவருடைய எழுச்சி உரைகளும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

- ஆசிரியர் குழு

Congratulations

R. Babita, Assistant Professor of Commerce, S.T. Hindu College, Nagercoil has been awarded the degree of **Doctor of Philosophy in Commerce** by the Manonmaniam Sundaranar University for her thesis entitled ***An Analytical Study of Marketing Pharmaceutical Products in Kanniyakumari District***

MUTA congratulates and wishes her success in all her academic endeavours.

சட்டத்தின் பாதுகாப்பை விட
சங்கத்தின் பாதுகாப்பே நிலையானது.

- பேரா. வெ. சண்முகசுந்தரம்

அப்துல் கலாம் என்ற அற்புத மனிதர்

ச. இராமசுந்தரம்
M.K.U. கல்லூரி, மதுரை

தலைசிறந்த விண்வெளி விஞ்ஞானியும் முன்னாள் குடியரசுத் தலைவருமான ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் மறைவுச் செய்தி இந்நாட்டின் பெரும்பான்மை மக்களின் இதயத்தில் ஓர் அசைவை ஏற்படுத்திருக்கிறது. காரணம் அவர் ஓர் மாறுபட்ட குடியரசுத் தலைவராய் இருந்ததுதான்.

இதர குடியரசு தலைவர்களுக்கு இல்லாத ஓர் அம்சமாக இளைஞர்களிடமும், குழந்தைகளிடமும் உரையாட விரும்பிய உரையாடிய குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் திகழ்ந்தார். அவருடைய பதவிக்காலம் முடிந்தபிறகும் இவ்வுரையாடலைத் தொடர்ந்தார். இந்தியாவின் எதிர்காலத்தை குழந்தைகளும், இளைஞர்களுமே தீர்மானிக்கப் போகிறார்கள் என்பதால் அவர்களிடம் நிறைய பேச விரும்பினார். அவர்களுடைய இதயங்களை ஆக்கபூர்வமான சிந்தனைகளால் செதுக்க விரும்பினார்.

இந்தியாவின் மீதான பற்று

இந்த தேசத்தின் மீது மிகுந்த பற்றுதல் வைத்திருந்தார் கலாம். அதன் விளைவாக பல்வேறு திட்டங்களைப் பற்றி சிந்தித்துக்கொண்டே இருந்தார். எடுத்துக்காட்டாக, தமிழகத்தின் தண்ணீர் பஞ்சத்தைத் தீர்க்க திட்டங்களை உருவாக்கி தமிழக முதல்வர்களுக்கு அனுப்பினார். இதுபோன்று மீன்வளத்தைப் பெருக்க திட்டம், 900 கி.மீ. நீர்வழிப்பாதையை உருவாக்க திட்டம் என பல திட்டங்களை உருவாக்கினார். இந்தியா உலகிலேயே மிகச் சிறந்த நாடாக மாறவேண்டும் என கலாம் விரும்பினார். இது 2020-க்குள் நிகழ வேண்டும் என்பதன் விளைவே அவர் எழுதிய 'இந்தியா-2020' நூல்.

மத நல்லிணக்கம்

மதச்சார்பின்மை சிறுவயது முதலே அப்துல் கலாமிற்கு இயல்பான விஷயமாக இருந்தது. அதற்குக் காரணம் சிறு பிராயத்தில் இமாமாக இருந்த தன்னுடைய தந்தையுடன், கிறித்துவ தேவாலயத்தின் பாதிரியாரும், இராமேசுவரம் கோவில் அர்ச்சகருக்குமிடையே தினந்தோறும் தன்னுடைய இல்லத்தில் நடைபெற்ற உரையாடலாகும். அதேபோன்று

அவருடைய நெருக்கமான நண்பர்களாக இளவயது முதலே இருந்து வந்தவர்கள் பிற மதத்தைச் சார்ந்தவர்களாவர். இதோடுகூட சாதிமத பிரிவினைகளைப் பற்றி தெளிவான பார்வையை திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கொண்டிருந்தார். கடந்த ஆண்டு (2014) ஒடிசா மாநிலம் புவனேஸ்வரத்தில் பேசும்போது இந்தியாவின் முன்னேற்றத்திற்கு சாதி, மதங்களே தடையாக இருப்பதாக தெரிவித்தார். இதை உணர்ந்து மதத் தலைவர்களும் ஆன்மீகத் தலைவர்களும் நடந்து கொள்ளவேண்டுமெனவும் கலாம் வேண்டுகோள் விடுத்தார்.

அறிவியல் பார்வை

அனைத்து நம்பிக்கைகளையுமே விஞ்ஞானபூர்வமாக அணுகினார் கலாம். குடியரசுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டவுடன் அரசு அதிகாரிகள் அவரைத் தொடர்புகொண்டு பதவியேற்புக்கான 'நல்ல நேரமாக' அவர் கருதும் நேரத்தைத் தெரிவிக்குமாறு கூறினார்கள். அதற்கு கலாம், "நேரம் என்பது வானவியல் நடைமுறையைக் குறிக்கும் ஒரு நிகழ்ச்சி. அது ஒரு வானவியல் நிகழ்ச்சியே தவிர ஜோதிட நிகழ்ச்சி இல்லை", என்று தெரிவித்தார். இது அவருடைய விஞ்ஞான அணுகுமுறைக்கு எடுத்துக்காட்டு.

ஆசிரியராக

கற்பித்தல் பணியில் அதிக நாட்டமும் ஈடுபாடும் கொண்டவராயிருந்தார் கலாம். தனது காலம் மாணவர்களோடு கழிய வேண்டும் என்பது அவரது அவா. குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடிந்தவுடன் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துக்குச் சென்று மாணவர்களுக்கு பாடம் நடத்தினார். இறுதியாக ஷில்லாங்கிலும் ஐ.ஐ.எம். வளாகத்தில் மாணவர்களிடம் உரையாற்றிக்கொண்டிருந்தபோதுதான் மரணத்தைத் தழுவியிருக்கின்றார். மாணவர்களுடைய மத்தியில் இருக்கும்போதுதான் கலாமுக்கு மரணம் நிகழ்ந்துள்ளது. இது எந்தவொரு நல்ல ஆசிரியரும் விரும்புகின்ற பெரும்பேறு. அது அப்துல் கலாமுக்கு வாய்த்திருக்கிறது.

'கலாம் கையால்
பரிசுகள் வாங்கலாம்'

இது தமிழ் திரையிசைப் பாடல் வரிகள். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நம்மை விட்டு சென்றாலும் அவருடைய சாதனைகள், நினைவுகள் நம்முடன் வாழும். இந்த தேசம் இன்னும் பல கலாம்களை உருவாக்க அவை உதவும்.

Love your job
but don't love your company,
because you may not know
when your company
stops loving you.

Dr. A.P.J. Abdul Kalam

படைப்பாளுமை மிக்க ஜெயகாந்தன்

ஜி. காசிராஜன்
திருவள்ளுவர் கல்லூரி



எழுத்தாளர்களை அதிகம் கொண்டாடாத தமிழ்ச் சமூகத்தில் மிகச்சிறந்த மற்றும் மிகப் பிரபலமான எழுத்தாளராக வாழ்ந்து மறைந்தவர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்களின் அடிநாதமே சமூகத்தின் மீதும், மானுடத்தின் மீதும் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் பேரன்புமேயாகும். அவரது எழுத்துக்களின் மூலம், சமூகத்தில் நிலவுகிற மூட நம்பிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கி, அதற்கான மாற்றத்தையும் முன் வைத்த படைப்பாளி அவர். தமிழகத்தில் எழுத்தை மட்டுமே நம்பி வாழ முடிந்த ஒரே போன தலைமுறை எழுத்தாளர் ஜெயகாந்தன் தான். ஆக்ரோசமாகப் பேசக்கூடிய மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர். தனக்கு நியாயமாகப்பட்ட விசயங்களை எந்த மேடையிலும், எந்தச் சூழ்நிலையிலும் தெளிவாக எடுத்துரைக்கக்கூடிய திறமையாளர்.

தமிழ் இலக்கிய உலகில் இன்றுவரை மிகச் சிறந்த இலக்கிய படைப்புகள் சிற்றிதழ்களின் மூலமாகவே வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் ஜெயகாந்தன் ஒருவர் மட்டுமே வெகுஜனப் பத்திரிக்கைகளின் மூலமாகவும் மிகச் சிறந்த இலக்கியப் படைப்புக்களைக் கொண்டு வரமுடியும் என நிரூபித்தவர். நான்காம் வகுப்பு வரை மட்டுமே பள்ளிப் படிப்பு முடித்த ஜெயகாந்தன் சிறுவயதிலேயே கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் பணிபுரிந்த அனுபவத்தாலும் பார்வையாலுமே முதன்முதலில் எழுத ஆரம்பிக்கிறார். தான் வாழ்ந்த காலத்திலேயே பல விருதுகள் பெற்றவர். இந்திய அரசால் வழங்கப்படும் பத்மபூசன் விருதைப் பெற்ற ஒரே தமிழ் எழுத்தாளர் இவர்தான். அகில இந்திய அளவில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் மிக உயரிய விருது ஞானபீட விருது. அந்த விருதாலும் ஜெயகாந்தன் கவுரவிக்கப்பட்டிருக்கிறார். சோவியத் யூனியன் வழங்கிய மிக உயரிய இலக்கிய விருதையும் பெற்றார்.

தமிழகத்தில் மக்கள் தொகையை ஒப்பிடும்போது தமிழக வாசகப் பரப்பு என்பது மிகக் குறுகிய பகுதிதான். அந்த குறுகிய பகுதியை மிக அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டவர் ஜெயகாந்தன். இன்றளவும் தொடர்ந்து வாசிப்புக் குள்ளாக்கி வருகிறார். அதனால் தான் இன்றளவும் அவரது கதாபாத்திரங்கள் தமிழக வாசிப்புப் பகுதியில் உயிருள்ள மனிதர்களாக உலா வந்துகொண்டிருக்கிறார்கள். *சில நேரங்களில் சில மனிதர்கள்* கங்காவை தமிழ் வாசகர்களால் ஒருபோதும் மறக்க முடியாது. கங்கா மாதிரியே இன்னொரு மறக்க முடியாத கதாபாத்திரம் *ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்* ஹென்றி. தமிழ் வாசக மனதை இளகியதாக மாற்றி அதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்பவர் தான் ஹென்றி.

தமிழ் சினிமா உலகிலும் இவர் அழிக்க முடியாத தடம் பதித்திருக்கிறார். இவரது நாவல்களை சினிமாப் படைப்பாக்கி அதில் வணிக ரீதியாக, வெற்றிகளையும், தோல்விகளையும் சந்தித்திருக்கிறார். ஆனால் இலக்கியத்தரமான படைப்புகளை தந்து இந்தியக் குடியரசுத் தலைவரிடம் விருதும் பெற்றிருக்கிறார்.

சமகாலத்து அரசியலையும் கூர்மையாக விமர்சனம் செய்திருக்கிறார். அவர் காலத்து தமிழக அரசியலில் ஒப்பாரும் மிக்காருமற்ற முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் எம்.ஜி.இராமச்சந்திரன். சினிமாவின் மூலமாக தமிழக மூலைமுடுக்குகளில் உள்ள சாதாரண மக்களின் மனங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்தவர் எம்.ஜி.ஆர். தமிழக அரசியல் பெரும்பாலும் உணர்வு பூர்வமானதேயன்றி அறிவுபூர்வ மானதில்லை. சினிமா எவ்வளவு கவர்ச்சிகரமானது என்றும், சினிமா கதாநாயகனுக்கும் சாதாரண மக்களுக்குமான உணர்வுபூர்வமான உறவுச் சிக்கலைப் பற்றியும், நையாண்டித் தனத்துடனும், ஆழமான பார்வையுடனும் ஜெயகாந்தனால் எழுதப்பட்ட நாவலே *சினிமாவுக்குப் போன சித்தாளு*. அந்நாவலை எம்.ஜி.ஆர். அவர்கள் படித்திருக்கலாம் அல்லது அவரைச் சுற்றியுள்ளவர்கள் படித்துச் சொல்லியிருக்கலாம். அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், விமர்சனபூர்வமானது என்று ஏற்றுக்கொண்ட எம்.ஜி.ஆர். பெருந்தன்மை மிக்கவர். எவ்வளவு அதிகாரம் படைத்தவராக இருந்தாலும், சமூகத்தில் உள்ளதை உள்ளபடிச் சொல்வேன் என்று அந்நாவலை எழுதிய ஜெயகாந்தனின் பேராண்மை பாராட்டுக்குரியது.

தற்சமயம் ஜெயகாந்தன் இருந்து, மத்திய மாநில அரசு அதிகாரத்தில் இப்பொழுது உள்ளவர்களைப் பற்றி *சினிமாவுக்குப் போன சித்தாளு* மாதிரி ஒரு நாவல் எழுதியிருந்தால், அவர் பட்டிருக்கும் கஷ்டங்களை எண்ணிப் பார்க்க மனசு நடுங்கத்தான் செய்கிறது. இன்று ஜெயகாந்தன் நம்மை விட்டு மறைந்து போனாலும் அவரது படைப்புகளின் வழியாக என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

மலேசியாவில் நடைபெற்ற ஒன்பதாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் *மூட்டா* பேராசிரியர்களின் புத்தகங்கள் வெளியீடு

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் 2015 ஜனவரி 28 முதல் பிப்ரவரி 1 வரை நான்கு நாட்கள் நடைபெற்ற ஒன்பதாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் திருநெல்வேலி கல்லூரிப் பேராசிரியர்களின் நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன.

ஆய்வுக் கட்டுரை

உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான ஆய்வறிஞர்கள் கலந்து கொண்ட ஒன்பதாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை மலேசியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜிப் துன் ரசாக் தொடங்கிவைத்தார். பேராசிரியர் ச. மகாதேவன் விழா அரங்கில் மலேசியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜிப் துன் ரசாக்கை சந்தித்து மாநாடு சிறக்க வாழ்த்து தெரிவித்தார்.

மலேசியப் பல்கலைக்கழகம் ஒருங்கிணைத்து நடத்திய இம்மாநாட்டில் பாளை. சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ச. மகாதேவன் *திருக்குறளில் மருத்துவச் சிந்தனைகள்* எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கினார்.

சங்கரன்கோவில் மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் வ. ஹரிஹரன் அகநானூற்றில் கடலோரப் பதிவுகள்" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கினார்.

120 நூல்கள்

உலகமயக் காலகட்டத்தில் தமிழாய்வுக்கு வளம் சேர்த்தல் எனும் பொருளில் நடத்தப்பட்ட ஒன்பதாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சிறப்பு நிகழ்வாக சென்னை கலைஞன் பதிப்பகம் கோலாலம்பூரில் உள்ள மலேசியப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து *சங்க இலக்கியம் முதல் பாரதி வரை* எனும் தலைப்பில் 60 பேராசிரியர்களைத் தேர்வு செய்து அவர்களின் முயற்சியில் 120 நூல்களைத் தயாரித்து அந்தப் பேராசிரியர்களை மாநாட்டிற்கு அழைத்து சிறப்புச் செய்து 120 நூல்களையும் மாநாட்டில் வெளியிட்டது.

இருநூல்கள் வெளியீடு

பாளை. சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச. மகாதேவன் *பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார்* எனும் தலைப்பிலான இருநூல்களும், மேலநீலிதநல்லூர் பி.எம்.டி. கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் வ. ஹரிஹரன் *தேம்பாவணி, கல்லாடம்* எனும் தலைப்பிலான இருநூல்களும் சனவரி 31 அன்று மாலை 5 மணிக்கு கோலாலம்பூரில் உள்ள மலாயா பல்கலைக்கழகக் கலையரங்கில் வெளியிடப்பட்டன.

சங்க இலக்கியம் முதல் பாரதி வரை எனும் பொருளிலமைந்த 120 நூல்களை இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளுக்கான கட்டமைப்புத் துறையின் சிறப்புத் தூதுவரும் மலேசியா ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாட்டுத் தலைவருமான டத்தோ ஸ்ரீ எஸ். சாமிவேலு தலைமையேற்று வெளியிட்டார். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாரிமுத்து அந்நூல்களைப் பெற்றுக்கொண்டார். திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தாண்டவன், பேராசிரியர் ஜெயதேவன், பேராசிரியர் எஸ். குமரன், சென்னை கலைஞன் பதிப்பகம் நந்தன் மாசிலாமணி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

பேராசிரியர் ச. மகாதேவன், பேராசிரியர் வ. ஹரிஹரன் ஆகியோர் தாங்கள் எழுதிய நூல்கள் குறித்துப் பேசினர். மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் குறித்த நெல்லை பேராசிரியர்களின் பேட்டியை மலேசிய ஊடகங்கள் இணையதளத்தில் வெளியிட்டன. நூல்களை எழுதிய திருநெல்வேலி பேராசிரியர்களுக்கு விழாவில் நினைவுப்பரிசினை மலாயாப் பல்கலைக்கழகம் வழங்கிப் பாராட்டியது.

ஊழல் என்றால் என்ன?

எஸ். பால்ராஜ்
தூய சவேரியார் கல்லூரி

அன்னா ஹசாரே உண்ணாவிரதம் இருந்தார். ஊழலை எதிர்த்து சட்டம் இயற்றவேண்டும் என்று நாடே அவருக்கு ஆதரவு தெரிவித்தது. சந்தோசம். லோக்பால் மசோதாவும் நல்ல சில மாற்றங்களுடன் நிறைவேற்றப்படும். அப்படி இயற்றப்பட்டால் அதுவும் சந்தோசம் தான். சரி! ஊழல் செய்பவர்கள் யார்? நாம் எல்லோரும் என்ன நினைக்கிறோம் என்றால், "நான் செய்வது எல்லாமே நியாயம். ஊழல் செய்பவர்கள் எல்லோரும் மற்றவர்கள் தான்" என்று நினைக்கிறோம்.

ஊழலின் ஆணிவேர் எங்கே இருக்கிறது என்று பார்ப்போம். லஞ்சம் என்ற வார்த்தைக்கும் ஊழல் என்ற வார்த்தைக்கும் சம்பந்தம் இல்லை என எல்லோரும் நினைக்கிறோம். சாலையில் வாகனம் ஓட்டிச் செல்லும்போது, சிக்னலில் நிற்காமல் செல்வதாக வைத்துக் கொள்வோம். அல்லது லைசன்ஸ் இல்லாமல் வாகனம் ஓட்டியதாக வைத்துக் கொள்வோம். போக்குவரத்துக் காவலர் பிடித்து விடுகிறார். நாம் செய்த குற்றத்தைப் பொறுத்து அடுத்த நாள் நீதிமன்றத்தில் போய் அபராதம் கட்டுவதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறோமா? காவலர் லஞ்சம் கேட்க முற்பட்டாலும் "முடியாது நீதிமன்றத்தில் தான் அபராதம் கட்டுவேன்" என்று உறுதியாகச் சொல்கிறோமோ? காவலரிடம் முந்திக் கொண்டு லஞ்சம் கொடுக்கவே முயற்சி செய்கிறோம் இல்லையா? அப்படி என்றால் யார் குற்றவாளி?

இதனைத் தவிர்க்கலாம்! எப்படி? சாலையில் போகும்போது சாலை விதிகளை முழுவதும் கடைப் பிடித்தாலே போதுமே. அதுதான் நமக்கு முடியாத விஷயமாயிற்றே! வீடு கட்டுவதற்கு ஒரு வரைபடம் போட்டு நகராட்சி அலுவலகத்தில் அங்கீகாரத்திற்காகக் கொடுத்திருக்கிறோம். அதில் கேட்கப்பட்ட அனைத்து விபரங்களையும் சரியாகச் சமர்ப்பித்துவிட்டால் எதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டும்? நீங்கள் எல்லாவற்றையும் ஒழுங்காகக் கொடுத்து அலுவலகத்தில் தாமதப் படுத்தினால், தகவலறியும் உரிமைச் சட்டம் தான் இருக்கிறதே! அதற்கும் நமக்குப் பொறுமை கிடையாது.

சினிமா பிரபலங்கள் ஊழலை எதிர்த்து உண்ணாநோன்பு

இருந்தார்கள். வரவேற்கத்தக்கதுதான். தாங்கள் வாங்கும் சம்பளம் அனைத்துக்கும் ஒளிவு மறைவின்றி வரி கட்டி விடுகின்றார்களா? சம்பளம் பேசும் போதே வெள்ளையாக இவ்வளவு, கறுப்பாக இவ்வளவு என்று ஏன் பேசவேண்டும்?

ஒவ்வொரு ஊரிலும் உள்ள பிரபல ஜவுளிக் கடைகள், நமக்குக் கொடுக்கும் ரசீதுப் பணத்தைக் கணக்குப் பார்த்தா விற்பனை வரியைக் கட்டுகிறார்கள்? நமக்கு ஒரு ரசீது. வரி கட்ட வேறு ரசீது! விற்பனை வரி முதல், வருமான வரி வரை அனைத்து அலுவலகங்களுக்கும் இது நன்றாகவே தெரியும். இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் ஏதாவது பிரச்சினை என்றால் உடனே ஒரு பிரபல கடையில் அதிரடி சோதனை என்று மறுநாள் தினசரிகளில் வருகிறது. பல கோடி ரூபாய் வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாம்! அப்படியானால் அந்த ஒரு கடை மட்டும்தான் இதுவரை வரி ஏய்ப்பு செய்துகொண்டிருக்கிறதா? நாட்டில் உள்ள அனைத்து வியாபார நிறுவனங்களும் ஒழுங்காக வரி கட்டிக் கொண்டிருக்கின்றன என்றல்லவா அர்த்தம்.

எந்த ஊரிலாவது, பேருந்து நிலையங்களில் கடையை ஏலத்தில் எடுத்தவர்கள் கடையை நடத்துகிறார்களா? ஏலத்தில் எடுப்பவர் தான் கடையை நடத்த வேண்டும் என்று சட்டம் தாளில் இருக்கிறது. அதனை அமுல்படுத்தினாலே அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும்.

நம் நாட்டில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குத் தினசரி ஓடும் சொகுசுப் பேருந்துகளில் ஒரே பதிவு எண்ணில் இரண்டு பேருந்துகள் என்று எத்தனை ஓடுகின்றன தெரியுமா? இவையெல்லாம் போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்குத் தெரியாமலா நடக்கிறது?

சூதாட்டம் ஆடியதாக நீதிமன்றத்தில் நான்கு பேரை ஆஜர்படுத்துகிறார்கள். ஒவ்வொருவரும் வைத்து ஆடிய பணம் ஆளுக்கு ஆயிரம் இருக்கும். அந்த நான்கு பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் காவலர்கள் அந்தப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு, ஒவ்வொருவரும் நூறு ரூபாய் வைத்து சூதாடியதாக ஆஜர்படுத்துகிறார்கள். யாருக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்?

அரசு அலுவலர்கள் லஞ்சம் கேட்கிறார்களா? கொடுக்க வேண்டாம். அவ்வாறு கொடுக்க வேண்டாம் என நினைத்தால், நாம் எந்தக் குறுக்கு வழியையும் பின்பற்றக்கூடாது. ஏன், யோசிக்கவே கூடாது. பிறகு எங்கே லஞ்சம் பிறக்கிறது, அவசரமாக ரயிலில் பிரயாணம் செய்ய நேர்கிறது. உடனே என்ன செய்கிறோம்? ட்ராவல் ஏஜென்டைப் பிடித்து எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை எனக்கு டிக்கெட் வேண்டும் என்று சொல்கிறோம். யாருக்கோ நியாயமாகப் போக வேண்டிய டிக்கெட் தானே உங்களுக்கு வருகிறது. கால் கடுக்க வரிசையில் நின்றவருக்கு டிக்கெட் கிடைக்காமல் போய்விட்டதே!

ஊழல் செய்ய முதல் படி லஞ்சம். லஞ்சம் கொடுக்க ஆரம்பிப்பது நாம் குறுக்கு வழியில் செல்ல முயற்சிக்கும்போது தான். படிக்கும் மாணவன், ஒழுங்காகப் படிக்காமல் பணம் கொடுத்துத் தேர்வில் ஜெயிக்க வேண்டும் என்று நினைப்பதே குறுக்கு வழி. ஒவ்வொரு தனி மனிதனும், நமக்கு முடிந்தவரை ஒரு குறுக்கு வழியைத் தேடுகிறோம். நியாயத்திற்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும் என்று நினைத்தாலே, லஞ்சம் பின்பு ஊழல் என்று வராது. யாரோ செய்வதுதான் ஊழல். நாம் செய்வது ஊழல் கிடையாது என்று நினைப்பதை முதலில் விட வேண்டும்.

விற்பனை வரியையும், வருமான வரியையும், ஒழுங்காகக் கட்ட வைப்பதற்கு என்ன வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம் என சிந்திக்க வேண்டும். முதலில் பொதுமக்கள் எல்லாக் கடைகளிலும் ரசீது கேட்க வேண்டும். அரிசி வாங்கினாலும் ரசீது, அல்வா வாங்கினாலும் ரசீது. இப்படிக் கேட்கும் போது, ரசீது போட்டால் விலை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என மக்களை வியாபாரிகள் மிரட்டுவார்கள். பரவாயில்லை என்று துணிச்சலாகச் சொல்ல வேண்டும். அவர்களை இரண்டு வரிகளையும் கட்ட வைக்க நம்மாலான முயற்சி.

அரசு சார்பாகச் செய்ய வேண்டியது. படிப்படியாகப் பணப்புழக்கத்தைக் குறைக்க வேண்டும். ஒவ்வொரு கடைக்கும் ஒரு வரம்பு வைக்கலாம். உதாரணத்திற்கு நகைக்கடை என்றால், பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் நகை வாங்கினால் பணமாகக் கொடுக்க முடியாது. வங்கியின் வரைவோலை மூலமாகவோ, ATM அட்டை வழியாகவோதான் நகை வாங்க முடியும். அந்த அட்டையைப் பயன்படுத்தும்போது, உங்களுக்கும் ரசீது வரும். அடுத்த நிமிடமே ஆன்லைனில் விற்பனை வரியையும், வருமான வரியையும் பிடித்துவிடுமாறு ஆணைகளைக் கொடுத்து விடலாம். முதலில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். பொது மக்கள் ஒத்துழைத்தால், நகைக் கடையில் ஆரம்பித்து ஒவ்வொரு கடையாக விரிவுபடுத்தலாம்.

எலெக்ட்ரானிக் தராசை அனைவரையும் வைக்கச் சொல்லும் போது கஷ்டமாக இருந்தது. இப்போது எடையில் ஏமாற்றுவது கணிசமாகக் குறைந்திருக்கிறதே. பொது மக்கள் பணமாகத் தரமாட்டேன், வங்கி அட்டையைத் தான் பயன்படுத்துவேன் என்று பிடிவாதம் பிடித்தால் தானாக வரிஏய்ப்பு குறையும். பெட்டிக் கடையில் வாழைப்பழம், வெற்றிலை வாங்க மட்டும் பணத்தை நேரடியாகப் பயன்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட சிறு வியாபாரிகளுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்துவிடலாம். நாம் தான் வரி ஏய்க்கும் பணமுதலைகளையே பிடித்து விடலாமே! ஊழலை ஒழிப்பதற்கு ஒவ்வொரு தனிமனிதனும் ஆற்றவேண்டிய சிறந்த கடமை ஒன்று இருக்கிறது என்றால், அது தனிமனிதனின் ஒழுக்கம்தான்.

மூட்டா உறுப்பினர் பயிற்சி முகாம் - 2015

V. மாலைசூடும் பெருமாள்
ஆதித்தனார் கல்லூரி

*மூட்டா*வின் 35-ஆவது உறுப்பினர் பயிற்சி முகாம் குற்றாலம் *பௌடா* மையத்தில் மே மாதம் 5 மற்றும் 6 தேதிகளில் நடைபெற்றது. இம்முகாமில் மொத்தம் 91 பேர் கலந்துகொண்டனர். கலந்து கொண்டவர்களில் 50 விழுக்காட்டிற்கு மேல் புதிய உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பெரும் பான்மையோர் 40 வயதுக்குட்பட்டவர்கள் என்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

முதல் நாள் காலை 10 மணி அளவில் உறுப்பினர்கள் அறிமுகத்தோடு முகாம் துவங்கியது. மூட்டா தலைவர் பேரா. **P. மனோகர ஜஸ்டஸ்** தலைமையில் தொடக்கவிழா நடைபெற்றது. *மூட்டா* உறுப்பினர்களை முன்னணி போராளிகளாக உருவாக்குவது, உறுப்பினர்களுக்கு *மூட்டா* செயல்பாடுகள் குறித்து பயிற்சி அளிப்பது, கொள்கை விளக்கம் மற்றும் தொழிற்சங்க அறிவை

வளர்ப்பது ஆகியன முகாமின் முதன்மை நோக்கங்கள் என்று தன் தலைமையுரையில் அவர் குறிப்பிட்டார். *மூட்டா* தொடர்ந்து தன் உறுப்பினர்களுக்கு 35 ஆண்டுகளாக பயிற்சி அளிப்பதை பெருமிதத்துடன் நினைவு கூர்ந்தார்.

சிஐடியு தமிழ் மாநில துணைச் செயலாளர் தோழர் **கருமலையான்** முகாமைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். தொழிற்சங்கச் செயல்பாட்டிற்கு முறையான பாடத்திட்டம் அவசியம் என்று குறிப்பிட்ட அவர், கல்வித்துறையில் தனியார்மயம் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதையும், இதை அரசு ஒழுங்குப்படுத்தத் தவறிவிட்டதையும் சுட்டிக்காட்டினார். தொழிற்சங்கப் பார்வையும், செயல்பாடும் எப்படி இருக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்திப் பேசினார். இன்றைய தொழிலாளர்கள் "நவீன கொத்தடிமைகளாக" மாற்றப்படுவதைச் சாடிய அவர், Regulating Labour - Deregulating Capital என்ற நிலைப்பாட்டை மத்திய, மாநில அரசுகள் எடுத்துவருவது ஆபத்தானது என்றார்.

முதல் அமர்வு *மூட்டா* இதழ் ஆசிரியர் பேரா. **ப.த. பால்பாண்டியன்** தலைமையில் நடைபெற்றது. முன்னதாக நான்காம் மண்டலச் செயலர் **பேரா. நாகராஜன்** வரவேற்புரை நிகழ்த்தினார். பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் பதிவாளரும், சென்னை பௌன்டேஷன் சிறப்பு ஆலோசகரும் பொருளியல் நிபுணருமான முனைவர் **ஆத்ரேயா** *தாராளமயமாக்கப்பட்ட பின் இந்தியப் பொருளாதாரமும், சவால்களும்* என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். அவர் தமது உரையில் சுதந்திரத்திற்குப் பின் இன்று வரையிலான அரசின் கொள்கை மாற்றங்களால் ஏற்பட்ட தாக்கங்களைப் பட்டியலிட்டுக் கூறினார். *சீர்திருத்தங்கள்* என்ற பெயரில் அந்நிய நாட்டுப் பொருட்கள், சேவைகள், நிதி மூலதனம் இந்தியாவிற்குள் வருவதற்கு

வசதியாக தடைகள் நீக்கப்பட்டு தாராளமயம், தனியார்மயம் போன்ற கொள்கைகள் 90-களுக்குப் பின்னர் அதிக அளவில் பின்பற்றப்பட்டன. இதன் விளைவாக, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சேவைகள் ஆகியவற்றில் தனியார் ஆதிக்கம் பெருகிவிட்டது" என்று குறிப்பிட்டார்.

"1991-க்குப் பின்னர் ஒட்டுமொத்த வளர்ச்சி அதிகரித்துள்ளது. என்றாலும், விவசாய உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது. வேலை வாய்ப்பு குறைந்துள்ளது. நாட்டின் நான்கில் ஒரு பகுதி செல்வம் பெரு முதலாளிகளிடம் குவிந்துள்ளது. இந்த முரண்பாட்டினால் பெருவாரியான பாமர மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்று கூறிய அவர், 'மனித நேய பொருளாதாரம்' நம் நாட்டிற்கு அவசியம் என்று வலியுறுத்திப் பேசினார். இந்தியப் பொருளாதாரம் இறக்குமதி, சேவைத்துறை மற்றும் அன்னிய முதலீட்டுத் துறைகளில் வெகுவாக திறந்துவிடப்பட்டதன் விளைவு, நெறிமுறைகள் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்ட நிலையில் உள்ளது. கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல சேவைகள் ஏழை, எளிய மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதுதான் தாராள மயத்தின் 'பலன்கள்'. வாக்களிக்கும் உரிமை மட்டுமே மக்களுக்கு! ஆனால் பலனை அனுபவிக்கும் உரிமையும், அரசாங்கங்களும் பெரு முதலாளிகள் கையில் இருக்கிறது. Shining India என்பது அம்பானி போன்ற முதலாளிகளுக்குத் தான். உண்மையில் நாம் பார்ப்பது Suffering India" என்று புள்ளி விவரங்களுடன் 1947 முதலான வரலாற்றுப் பின்னணியில் பொருளாதார நிலையினை விளக்கிக் கூறினார்.

உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சிறப்பாக பதிலளித்து விளக்கம் அளித்தார். அமர்வின் இறுதியில் மத்திய இணைப்பொதுச் செயலாளர் பேரா. **கணேசன்** நன்றியுரை ஆற்றினார்.

மாலை தேநீருக்குப் பின் நடந்த இரண்டாம் அமர்வு இரண்டாம் மண்டலத் தலைவர் பேரா.

கல்யாணராமன் தலைமையில் நடைபெற்றது. மூன்றாம் மண்டலத் தலைவர் முனைவர் **முருகேசன்** வரவேற்புரை நல்கினார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்க மாநிலத் தலைவர் தோழர் **தமிழ்ச்செல்வன்** *மதச் சார்பின்மைக்கு எதிரான இன்றைய சவால்கள்* என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் மதவாத மத்திய அரசு வரலாற்றைத் திரித்து பாடத்திட்டம் உருவாக்குகிறது என்றும், மதச்சார்பின்மை என்ற வார்த்தையை அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க முயல்கிறது என்றும் குறிப்பிட்டார். இந்துத்வா கொள்கையைப் பின்பற்றும் பிற்போக்கான இந்த அரசு மக்களிடம் துவேஷத்தை வளர்க்கிறது என்றும் கூறினார். வரலாற்று ரீதியான வழிபாட்டு முறைகள், இந்தியக் கலாச்சார மற்றும் பண்பாட்டுத் தளத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் குறித்து சான்றுகளோடு உரையாற்றினார். முடிவில் நான்காம் மண்டலத்தலைவர் பேரா. **இரத்தின சிகாமணி** நன்றியுரை வழங்கினார்.

முதல்நாள் முகாமின் இறுதி நிகழ்வாக குழு விவாதம் நடைபெற்றது. உறுப்பினர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். பேராசிரியர்கள் **சண்முகவேல், பாலு, ஜேம்ஸ், சகாய அந்தோணி சேவியர், சுடலையாண்டி** ஆகியோர் குழுத் தலைவர்களாகச் செயல்பட்டனர்.

முழு விவாதத்துக்கான தலைப்புகள்:

1. மூட்டா கிளைச் செயல்பாடுகளை மேம்படுத்துவது எப்படி?
2. இளைய ஆசிரியர்களை *மூட்டாவுக்கு* ஈர்க்கும் வழிமுறைகள் என்ன?
3. பெண் உறுப்பினர்களை அணி திரட்ட என்ன செய்யவேண்டும்?
4. இன்றைய சூழலில் எவ்வகையான போராட்ட வடிவங்கள் பொருத்தமாக இருக்கும்?
5. சுயநிதி, பல்கலைக்கழக மற்றும் உறுப்புக் கல்லூரி ஆசிரியர்களை அணி திரட்டுவது எப்படி?

06.05.15 புதன் காலை 10 மணிக்கு மூன்றாம் அமர்வு துவங்கியது. மனோன்மணியம் சுந்தரனார் ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் **இராதாகிருஷ்ணன்** தலைமை ஏற்க, மூன்றாம் மண்டலச் செயலர் முனைவர் **நவநீத கிருஷ்ணன்** வரவேற்புரை நிகழ்த்தினார். *உயர் கல்வியில் நவீன*

தாராளமயக் கொள்கையின் தாக்கம் என்ற தலைப்பில் *மூட்டா*வின் முன்னாள் தலைவரும், *அம்ஃபக்டோ* தேசியச் செயலருமான பேராசிரியர் **எஸ். விவேகானந்தன்** உரையாற்றினார். பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உயர்கல்வி எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விளக்கிப் பேசிய அவர், 25 விழுக்காடு உயர்கல்வி விகிதம் (GER) பெறுவதற்கு அரசு சொல்லும் Public Private Model கல்வி நிறுவனங்கள் ஒருபோதும் Access, Equity, Excellence நிலைகளை அடைய முடியாது என்று வலியுறுத்திப் பேசினார். உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஆசிரியர்களின் பங்கும் மிகவும் அவசியம் என்றார். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உயர்கல்விக்கான நிதி முழுமையாக செலவிடப்படவில்லை என்றும், அதே நிலை தான் பன்னிரெண்டாவது திட்டகாலத்திலும் நீடிக்கிறது என்றும் கூறினார். இத்திட்டத்தில் நோக்கங்கள் நிறைவேற வேண்டுமெனில் Regulatory Measures கண்டிப்பாக தேவை எனக் குறிப்பிட்டார். இறுதியாக முதல் மண்டலத்தலைவர் பேரா. **விஜயன்** நன்றி கூறினார்.

தொடர்ந்து நடைபெற்ற Open Session-இல் உறுப்பினர்கள் தங்கள் பணி தொடர்பான மற்றும் இயக்க நடவடிக்கை குறித்த கேள்விகள் கேட்டனர். அனைத்து வகையான கேள்விகளுக்கும் மத்திய பொறுப்பாளர்கள் பதிலளித்தனர். பயனுள்ள இந்த அமர்வில் உறுப்பினர்களின் சந்தேகங்களும் தீர்த்துவைக்கப்பட்டன. பேராசிரியர்கள் **அமீர் ஹம்சா, ஜேம்ஸ், சம்பத்குமார், முருகேசன், கோபிநாத், சிவபாலன்** ஆகியோர் உறுப்பினர்கள் சார்பாக கேள்வி பதில் அமர்வில் பங்கேற்றனர்.

இறுதியாக நடைபெற்ற நிறைவு விழாவில் குழு விவாத அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. குழுத்தலைவர்கள் சாராம்சங்களை விளக்கிப் பேசினர். *மூட்டா*வின் துணைத்தலைவர் பேரா. **நாகராஜன்** உறுப்பினர்கள் முகாம் பற்றி தெரிவித்த Feedbacks - ஐ பகுத்தாய்ந்து உரையாற்றினார். **பேராசிரியர்கள் இந்திரா மஹாலெட்சுமி, பேராசிரியர்கள் சிவபாலன், மாலை சூடும் பெருமாள், ஜேம்ஸ்** ஆகியோர் முகாம் பற்றிய மதிப்பீட்டை தாங்கள் சார்ந்த மண்டலங்களின் சார்பாக வழங்கினர். மூட்டா பொதுச் செயலாளர் **எஸ். சுப்பாராஜு** முகாம் நிறைவுரை நிகழ்த்தினார். முதலாம் மண்டலச் செயலர் **செந்தாமரைக் கண்ணன்** நன்றியுரை கூற மூட்டா எழுச்சிக் கோஷங்கள் விண்ணைப் பிளக்க முகாம் நிறைவு பெற்றது.

இதெல்லாம் ஒரு பொழப்பா!

ஆர். மனுநீதி
போப் கல்லூரி, சாயர்புரம்

"முகக்கண்ணாடியில் திருநீற்றைச் சரிசெய்துகொண்டு மேஜையின் மேலிருந்த சாவியை எடுத்து பேண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான் தாசில்தார் ஆபீஸ் கிளார்க் மகேந்திரன்.

"மகேஷ்வரி, மகேஷ்வரி" படபடத்தான்.

முந்தானையால் நெற்றியை துடைத்துக்கொண்டே "இந்தாங்க, ரெடியாயிடுச்சு" என்று மத்தியானச் சாப்பாட்டை அவனது ஆஸ்தான பையில் வைத்துக் கொடுத்தாள் அவன் மனைவி.

"இன்னைக்கி சாயங்காலம் மறந்துடாதீங்க" கிளம்புமுன் நினைவூட்டினாள் மகேஷ்வரி. "சரி, சரி" என்றவாறே காம்பவுண்ட் சுவருக்கு வெளியில் நிறுத்தியிருந்த புல்லட்டில் அமர்ந்தான். பைக்கை கிளப்ப ஓங்கி மிதித்தான். வண்டி கிளம்பவில்லை. சாவியை சரிசெய்து கொண்டு மீண்டும் மிதிக்க முற்படும் நேரம் "சார்", என்ற சத்தம் கேட்டு திரும்பினான். அரைகுறை ஆடையில் ஒரு சிறுவன் "சார் எனக்கு ஒரு அஞ்சு ரூபா இருந்தா குடுங்க, ரெண்டு நாளா சாப்பிடவே இல்லை" என்றவாறு கண்ணீர் மல்க நின்றான்.

மகேந்திரனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. "காலங்காத்தால வந்துட்டானுங்க. இதெல்லாம் ஒரு பொழப்புன்னு அலையறீங்களே. எங்கேயாவது போய் வேலை செஞ்சு பொழைக்க வேண்டியதான" என்றவாறு சிறுவனின் முகத்தை முறைத்துக்கொண்டே பைக்கை ஓங்கி மிதித்தான். புல்லட் தடதடவென்று பைக் புகையில் சிறுவன் முகத்தை மூட, மகேந்திரன் பயணித்தான்.

அன்று அலுவலகம் கலகலவென்று இருந்தது. "என்ன சீனிவாசா" ரொம்ப குஷியா இருந்த மாதிரி இருக்கு என்ன விசேஷம்?.

"எனக்கு மட்டுமில்லப்பா நம்ம எல்லாருக்கும்தான்... இந்த மாதம் நம்ம அரியர்ஸ் மொத்தத்தையும் குடுக்கச் சொல்லிட்டான், நம்ம கவர்மெண்ட். பெஸ்டிவல் போனஸ் இந்த வருஷம் அஞ்சாயிரமாம். உனக்கு தெரியாதா?" பக்கத்து இருக்கை சீனிவாசன் பட்டியலிட்டார்.

"அட் இதான் நேத்தே தெரியுமே. நானும் ஏதோ புதுசா வந்திருக்கான்னு பார்த்தேன்" என்றவாறே மேஜையின் மேலிருந்த பைல்களில் கண்களை ஓடவிட்டான் மகேந்திரன். தன் மகனுக்கு ஓபிசி சர்டிபிகேட் வாங்க ஒரு வாரத்துக்கு முன்னால போட்ட பெரியவருடைய அப்ளிகேசன் கண்ணில் தட்டுப்பட்டவுடன், உஷாரானான். "மகேஷ்வரிக்கு இன்னைக்கு எப்படியும் தங்கக் கொலுசு வாங்கிட வேண்டியதான். பெரியவர்கிட்ட ஒரு ஆயிரம் ரூபாயை வெட்டச் சொன்னா, கொலுசு

வாங்குறதுக்கு துண்டு சுருளத் தொகை வந்துடும். மனதுக்குள் மடமடவென்று கால்குலேட்டர் வேலை செய்தது. "சார்" சத்தம் கேட்டு திரும்பினான். கதவு பக்கம் பெரியவர் நின்றுகொண்டிருந்தார். கதவு பக்கம் மகேந்திரனின் சீட் இருந்தது அவனுக்கு பலவிதத்தில் உபகாரமாக இருந்தது.

"என்ன பெரியவரே? ஒரு வாரமா ஆளையே காணோம். அப்ளிகேஷன் போட்டதோட முடிஞ்சுதா? என்ன ஏதுன்னு வந்து பார்க்க வேண்டாமா? உள்ளே வாங்க".

ஏற்கனவே பணப்பிரச்சனையால் வாழ்க்கையில் முடங்கிப்போன பெரியவர் தன் மகன் எப்படியாவது ஓபிசி கோட்டாவில் வேலை கிடைத்து குடும்பத்தைக் காப்பாத்துவான் என்ற கனவுடன் கலங்கி நின்று கொண்டிருந்தார். மகேந்திரனின் மேஜை பக்கமாய் வந்த பெரியவர் "என்ன சார், சர்டிபிகேட் இன்னும் ரெடியாகலையா?" என்றார்.

"இதெல்லாம் சட்டுபுட்டுன்னு முடிகிற விவகாரமா? எல்லா ரெக்கார்டையும் செக் பண்ணித்தான் கொடுக்கணும். உங்களுக்கு ரொம்ப அவசரமா வேணும்னா ஒரு ஆயிரம் ரூபா கொடுத்துட்டு போங்க. நாளைக்கு காலையில் சர்டிபிகேட் ரெடியாயிடும்" மகேந்திரன் வலையை விரித்தான்.

மகேந்திரனின் வார்த்தைகள் பெரியவரின் உள்ளத்துக்குள் உருண்டு கொண்டிருந்த எரிமலையை வெடித்துச் சிதறவைத்தது. சற்றும் எதிர்பாராத விதமாய் பெரியவர் விரைந்து நின்று வார்த்தை கனல்களை வீசத் தொடங்கினார்.

"அரசாங்கம் தான் உங்களுக்கு அள்ளி அள்ளி கொடுத்திருக்குதே, அது காணாதுன்னு இது வேறயா... இதெல்லாம் ஒரு பொழப்பா, இதுக்கு எங்கேயாவது போய் பிச்சை எடுக்க வேண்டியதான" - கழுத்தில் கிடந்த துண்டை உதறிவிட்டு இடத்தைக் காலி பண்ணினார் பெரியவர்.

சுளீரென்றது மகேந்திரனுக்கு. அரை வினாடியில் அரைகுறை ஆடை சிறுவன் மனதில் தோன்றி மறைந்தான். அலுவலகத்தில் அனைவரின் பார்வையும் மகேந்திரனை கூனிக் குறுக வைத்தன. ஒரே நாளில் குறுகிய இடைவெளியில் நடந்து முடிந்த நிகழ்வுகள் மகேந்திரனின் மழுங்கிய மனச்சாட்சியை கூறாக்கியது மேஜையின் கீழ் டிராயரைத் திறந்து ஏற்கனவே ரெடியாகியிருந்த ஓபிசி சர்டிபிகேட்டை எடுத்துக் கொண்டு பெரியவரின் முகவரிக்கு பறந்தான். எதுவும் பேசாமல் சர்டிபிகேட்டை கொடுத்துவிட்டு ஆபீஸ் திரும்பிய மகேந்திரன் மறுபிறவி எடுத்ததுபோல் உணர்ந்தான். சாயங்காலம் ஆறு மணிக்கு வீட்டுக்குச் சென்றதும் மகேஷ்வரி "என்னங்க வாங்கிட்டு வந்தீங்களா" என்றாள்.

"இல்லை மகேஷ்வரி இந்த மாதம் சம்பளம் வரட்டும்" என்று சோபாவில் அமர்ந்தான்.

மகேந்திரனின் மாற்றத்தை கிரகித்துக்கொண்டே மகேஷ்வரி மறுவார்த்தை பேசாமல் நகர்ந்தாள்.

பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

ம.சு. பல்கலைக் கழகக் கல்லூரி / பல்கலை உறுப்புக் கல்லூரி மற்றும் சுயநிதிக் கல்லூரி / வகுப்பு ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியமாக யு.ஜி.சி. பரிந்துரைத்துள்ள ரூ.25,000/- வழங்குதல், அரசு விதிகளின் படியான விடுப்பு வசதிகள், PF, ESI மற்றும் பணிப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துதல், சுயநிதிப்பிரிவில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உடனே தகுதி சரிபார்த்து ஒப்புதல் (qualification approval) வழங்குதல், சட்டவிதிகளை மீறி ஆசிரியர்களைப் பணிநீக்கம் செய்ததோடு மாணவர்களிடம் கட்டணக் கொள்ளை நடத்திய தனியார் கல்லூரிகளின்மீது தகுந்த நடவடிக்கை எடுத்தல், பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு, பல்கலைக்கழக ஆட்சிக்குழு தீர்மானத்தின்படி, முதன்மைக் கண்காணிப்பாளரை நியமிப்பது, தகுதியுடைய அனைத்துப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் முறையான பணிமேம்பாட்டினை வழங்கிடவும், 11-ஆவது திட்டப் பேராசிரியர்களை நிரந்தரப் பணியிடங்களில் பணியிலமர்த்தவும், புதிய கல்லூரிகளுக்கும் புதிய பாடப்பிரிவுகளுக்கும் அறிந்தேற்பு வழங்கும் போது யு.ஜி.சி. விதிமுறைகள், 2010, தமிழக அரசு விதிகள் மற்றும் பல்கலைக்கழகச் சட்ட விதிகளை கராராக அமல்படுத்துதல் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற பல்கலைக்கழக நிர்வாகத்தை வலியுறுத்தி 16.04.2015 அன்று மாலை 4.30 மணியளவில் 400க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம் மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் முன்பு நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு *மூட்டா*வின் தலைவர் பேரா. T. மனோகர ஜஸ்டஸ் தலைமை வகித்தார். மண்டலப் பொறுப்பாளர்கள் பேரா. T. நாகராஜன், பேரா. S. நவநீதகிருஷ்ணன், பேரா. R. முருகேசன், பேரா. C. இரத்தினசிகாமணி, பல்கலைக்கழக மூட்டா கிளைச்செயலர் பேரா. N. ஸ்டீபன், மன்றத் துணைத் தலைவர் பேரா. J. ஜான்சன், இணைச்செயலர் பேரா. C. கணேசன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். மூட்டா பொதுச்செயலர் பேரா. S. சுப்பாராஜு ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து உரையாற்றினார்.

அரசுக் கல்லூரி ஆசிரியர் கழக மதுரை மண்டலச் செயலாளர் பேரா. அஜீஷ் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி சிறப்புரை நிகழ்த்தினார்.

வாட்ஸ் அப் விருந்து

பகிர்வு 1 : 96296 30113

A : சார், நீங்க எந்தக் கடவுளைக் கும்புடுவீங்க?

B : கல்யாணத்துக்கு முன்னாடியா? பின்னாடியா?

A : கல்யாணத்துக்கு முன்னாடி சொல்லுங்களேன்.

B : முருகர் தான் ரொம்ப புடிக்கும்.

A : அப்போ, பின்னாடி?

B : நான் வேண்டாத தெய்வம் இல்லை!

பகிர்வு 2 : ஏசு, தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை

பாட்டிலில் அடைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட ஒரு லிட்டர் குடிநீரின் சராசரி விலை ரூ. 20. தமிழகத்தில் சுத்திகரிக்கப்பட்ட அம்மா மலிவு விலை குடிநீரின் விலை ரூ. 10. இது நமக்குத் தெரியும். ஆனால் எத்தனை பேருக்கு மறை நீர் (Virtual Water) விலை தெரியும்?

மறை நீர் என்பது ஒரு வகை பொருளாதாரம். மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) ஒரு நாட்டின் பணத்தைக் கொண்டு மதிப்பிடுவது போல ஒரு நாட்டின் நீர்வளத்தைக் கொண்டு மதிப்பிடும் 'தண்ணீர் பொருளாதாரம்' இது. இதைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் ஆண்டனி ஆலன்.

இந்தக் கண்டுபிடிப்புக்காக 'ஸ்டாக் ஹோம் வாட்டர் 2008' விருது பெற்றவர்.

ஒரு பொருளுக்குள் மறைந்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத நீர் - இதுவே. மறைநீர் ஒரு தத்துவம். ஒரு மெட்ரிக் டன் கோதுமை 1600 கியூபிக் மீட்டர் தண்ணீருக்குச் சமம் என்கிறது. மறைநீர் தத்துவம். மறைநீர் என்பதற்கு ஆலன் தரும் விளக்கம்: "கோதுமை தானியத்தை விளைவிக்க நீர் தேவை. ஆனால் அது விளைந்தவுடன் அதை உருவாக்கப் பயன்பட்ட நீர் அதில் இல்லை. ஆனால் அந்த நீர் கோதுமை விளைவிக்கத்தானே செலவிடப் பட்டிருக்கிறது அல்லது மறைந்திருக்கிறது. இதுவே மறை நீர்.

கோதுமை தேவை அதிகம் இருக்கும் ஒரு நாடு. ஒரு மெட்ரிக் டன் கோதுமையை இறக்குமதி செய்யும் போது, அந்த நாடு 1600 கியூபிக் மீட்டர் அளவுக்குத் தனது நாட்டின் நீரைச் சேமித்துக் கொள்கிறது", என்கிறார் ஆலன்.

பகிர்வு 3: ஏசு, தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை

சிறு வயதில் வில்லன்களாகத் தெரிந்த அப்பாவும், ஆசிரியர்களும் வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வந்த பிறகு ஹீரோக்களாகத் தெரிகிறார்கள்.

பகிர்வு 4: லாரன்ஸ், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை

ஜெயலலிதா அவர்கள் நிரபராதி என்பது ஒரு புறம் இருக்கட்டும். குன்கா அவர்களின் தீர்ப்பு தவறு என்றால் ஒரு மாநிலத்தின் முதல்வர் மீது செய்யாத குற்றத்தை செய்ததாகக் கூறி தண்டனை கொடுத்து அவமானப்படுத்திய குற்றத்திற்காக குற்றவாளி ஆகிறார் குன்கா.

அதே சமயம் குமாரசாமி அவர்களின் தீர்ப்பு தவறு என்றால், ஒரு குற்றவாளிக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக குற்றவாளி ஆகிறார் குமாரசாமி.

நீதிபதிகள் இருவரில் யார் குற்றவாளி? குன்காவா? குமாரசாமியா? அல்லது அரசியல்வாதிகளா?

போங்கப்பா...

எவனாவது பசிக்கு, பன்னு, கின்னு திருடி இருப்பான், அவனையும் தியேட்டரில் 'பிளாக் டிக்கெட்' விக்கிறவனையும், ஹெல்மட் இல்லாமல் பைக் ஓட்டுறவனையும் பிடித்து... கூண்டில் நிறுத்தி... நீதியை ??? நிலைநாட்டுங்கள்.

பகிர்வு 5 :

பசுமைப் புரட்சிக்கு முன்பு விவசாயி மூன்று மூடை நெல் விற்று ஒரு பவுன் தங்கம் வாங்கினார். தற்போது 30 மூடை நெல் விற்றால் தான் ஒரு பவுன் வாங்க முடியும். முன்பு ஒரு தேங்காய் விற்று ஒரு லிட்டர் டீசல் வாங்கினார்கள். தற்போது 15 தேங்காய்கள் விற்றால் தான் ஒரு லிட்டர் டீசல் வாங்க முடியும் என்ற நிலை உள்ளது!

பகிர்வு : 6 எஸ். சுப்பாராஜு & முகமது சலீம் (மார்க்சிஸ்ட் தலைவர்)

லலித் மோடி விஷயத்தில் மனிதாபமான அடிப்டையில் உதவியதாக பாஜக துணிச்சலுடன் கூறுகிறது. இந்த மனிதாபமான உதவிகள் குற்றவாளிகளுக்கே ஏன் சென்றுசேர்கின்றன? சாதாரண மனிதர்களுக்கு ஏன் கிடைப்பதில்லை?

பகிர்வு 7 :

அமீர் ஹம்சா, சதக் அப்துல்லா அப்பா கல்லூரி

Live as if you were to die tomorrow.

Learn as if you were to live forever.

பகிர்வு 8 :

இரு காளை மாடுகள் இவ்வாறு பேசிக் கொள்கின்றன.

கா.மா 1: ஏன் மச்சான், ரொம்ப டல்லா இருக்கே, ஏதாவது பிரச்சனையா?

கா.மா 2: இந்தப் பாவிங்க டீசல் விலையை ஏத்தி விட்டு... நம்மள திருப்பியும் வண்டி இழுக்க வச்சிருவானுக போலிருக்கு!

பகிர்வு 9 : அருண் பிரசாத்

நடிகர் செந்திலின் சந்தேகம் :

பார்க்கிற கல்லூரி எல்லாத்துலயும் 100% Placement ன்னு சொல்றானுகளே... அப்ப தமிழ்நாட்டுல வேல இல்லாம இருக்கிறவங்க எல்லாம் ஐரோப்பாவுல படிச்சவங்கலா இருக்குமோ...!

தொகுப்பு : **முபாரகி**

நில அதிர்வு
புதையுண்ட உயிர்கள்
புலம் பெயர்ந்த மக்கள்!

நினைத்தாலே நெஞ்சம் பதைபதைக்கிறது. யாருக்கு யார் ஆறுதல் சொல்ல? புதையுண்ட உயிர்கள் ஐயாயிரமா, பத்தாயிரமா என்பது கூட தெரியாத வேதனை. கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் மக்கள் நேபாளத் தலைநகர் காத்மாண்டுவை விட்டு வெளியேறியதாக தகவல். 25.04.15 சனிக்கிழமை நேபாள மக்களின் சனியாக மாறும் என்று எவரும் எண்ணிப் பார்க்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபை கணிப்பின்படி 50,000 கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 80 லட்சம் பேருக்கு மேல் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். நேபாளுக்கான ஐக்கிய நாடுகள் சபை ஒருங்கிணைப்பாளர் 41 மில்லியன் டாலர் உதவி பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைப்படும் என்று கூறி உள்ளார். நேபாளத்தில் புதையுண்ட மக்களின் எண்ணிக்கையில் நம் நாட்டில் ஏற்பட்ட சோகம் மிகவும் சிறியதாகிவிட்டது!

முதல் துயரம் தீர்வதற்கு முன்னர் 13.05.2015 அன்று 7.3 ரிக்டர் அளவிலான மற்றுமொரு அதிர்வு நேபாள மக்களை சோகப்படுத்தியுள்ளது. உயிர்ச் சேதங்களும், பாதிப்புகளும் வேதனைக்குரியவை. ஜம்மு காஷ்மீரிலிருந்து, சென்னை - திருவனந்தபுரம் வரை நில அதிர்வுக்கு உள்ளாகும் மண்டலங்களாக 5.4 என்று நம்பர் போட்டு அறிவித்துள்ளனர் அறிவியல் அறிஞர்கள். 'வருமுன் காப்போம்' என்றபடி மத்திய மாநில அரசுகள் இயற்கைப் பேரழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு உடன் நிரந்தரத் தீர்வு காண திட்டமிடல் வேண்டும். போர்க்கால அடிப்படையிலான சிறப்புப் படைகளை பாதிப்புக்கு உள்ளாக இருக்கும் மண்டலங்களில் உடனடியாக ஏற்படுத்திட வேண்டும். இவ்வகையான மீட்புப் படைகள் நிரந்தரமாக செயல்படவேண்டும். போர்த் தளவாடங்களுக்கும், ஆயுதங்களுக்கும் செலவழிப்பதைக் குறைத்துக் கொண்டு மக்களைக் காக்கும் மகத்தான பணி செய்யும் மீட்புப் படைக்குச் செலவிடல் வேண்டும். இது மட்டுமல்லாது, இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாக்கும் விதமாக கட்டிடங்கள் அமைவதற்கான திட்டமும், சட்டமும் தேவை. அப்போதுதான் புதையுண்ட ஜீவன்களின் ஆத்மா ஆற்றுப் பெறும்.

அடுத்தடுத்து தொடர்ந்து 250 முறை நிலம் அதிர்ந்து நேபாளத்தை நாசம் செய்திருக்கிறது!

நேர்மறைச் சிந்தனை

இரா. ரீட்டா யசோதா
ஆதித்தனார் கல்லூரி,
திருச்செந்தூர்.

அலுவலகத்தில் தனக்கு அதிகாரியாக பணிபுரியும் நண்பன் இன்பனை சிறுவயது முதலே அறிவான் கண்ணன். தந்தையிழந்து, வறுமையறிந்து, மனித நிறங்கண்டு அடிபட்டு வளர்ந்தவன். சொந்த முயற்சியில் பல படி முன்னேறி தன் முன் நிற்கும் நண்பனை நினைக்கும்போது கண்ணனுக்குப் பெருமையாக இருந்தது.

"எப்படிடா இன்பா இப்படி? சின்ன வயசுல இருந்து உன்னைப் பார்த்துட்டு வர்றேன். எவ்வளவு வளர்ந்துட்டே தெரியுமா?" - ஆச்சரியப்பட்டு கேட்டான் கண்ணன். "எல்லாத்துக்கும் என் தன்னம்பிக்கைதான் காரணம் கண்ணா. என்னை அலட்சியப்படுத்தினவங்க முகத்திலெல்லாம் கரியப் பூசணும்னு ஒரு வெறியோட உழைச்சு இந்த நிலைமைக்கு வந்திருக்கேன். என்னால முடியும்கிற என்னோட பாஸிடிவ் சிந்தனைதான் எல்லாத்துக்கும் காரணம்" என்றான்.

"என்னவோ இன்பா, உன்னை நினைச்சா எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு. நான் மட்டுமில்லடா, நம்ம ஆஃபீசே உன்னைப் பெருமையா பார்க்குது தெரியுமா?", கண்ணன் கூறியதைக் கேட்டு இன்பன் முகம் சுழித்தான். "பெருமையா பார்க்குதுன்னு சொல்லாதடா. எல்லாம் பொறாமை, வயித்தெரிச்சல்காரங்க. இப்ப மட்டும் எனக்கு எங்கேயாவது சறுக்கிச்சுன்னா என்னைப் பார்த்து கைக்கொட்டி சிரிப்பாங்க. ஒரு பயலையும் நான் நம்ப மாட்டேன்" என்று இன்பன் கூறியதை எதிர்பாராமல் கண்ணன் துணுக்குற்றான்.

"எப்படிடா உன்னால இப்படி நினைக்க முடியறது? இப்பதான் தன்னம்பிக்கை, பாஸிடிவ் சிந்தனை பற்றி பேசினாய். பாஸிடிவ் சிந்தனைங்கிறது என்னால முடியும்கிற தன்னம்பிக்கை மட்டுமில்ல. நான் நல்லவன் என்பது எவ்வளவு உண்மையோ அதுபோல என்னை சுற்றி இருப்பவர்களும் நல்லவர்கள், என்னைப் பற்றி நல்லதையே நினைக்கிறார்கள். எல்லாம் நல்லதே நடக்கும் என்று நம்புகிற நம்பிக்கைக்கு பெயர்தான்டா பாஸிடிவ் சிந்தனை," என்று கண்ணன் கூறியதைக் கேட்டு இன்பன் தனது தவறான சிந்தனைக்காக வருந்தினான்.

An Open Letter to the Prime Minister:

WHY I WILL NOT WAIVE MY GAS SUBSIDY?

Mangalore Today News Network

Sumith S. Rao

Respected Sir,

You have asked the rich and affluent people of India to waive off their share of subsidy on gas cylinders used by them in their homes and help in nation building.

I, for one would definitely prescribe to your view and gladly do so. In return, I would like all of you esteemed gentlemen and ladies who run our great country to also reciprocate our generous offer.

If only, every corporator, MLA, MP, and Minister could also waive off his gas subsidy, we the people of India would be very proud of you and salute you.

You would be setting an example to the citizens of India. Most of you have declared incomes running into a few crores while contesting the elections.

When will the day come when you will think of our poor brethren and waive off all the perks that you enjoy because of your position.

When will you stop voting unanimously for a pay hike for yourselves, while bitterly fighting against all other issues in Parliament?

When will we see you act as responsible citizens and fight over issues rather than take party based decisions?

Let me tell you, dear Sir, the Chancellor of a super power like Germany Ms. Angela Merkel rides on a public train to work, whereas in our country everyone from the Prime Minister, to the Members of Parliament, even down to the Zilla Panchayat President is allocated a car which is paid for from the coffers of our country which is filled generously by the tax payers money.

You incur thousands of rupees worth of telephone bills, electricity bills, free accommodation in luxury bungalows, avail free travel on public transportation, go on foreign jaunts on flimsy excuses and we the people of India pay for it.

When will you be a proud Indian and pay for all these facilities availed by you?

You get admitted to luxury hospitals for even a headache and especially when a probe is launched against you for any misdemeanor. Even there, you get the best beds and facilities free of charge.

Pray, tell me, Sir "When will you pay for these privileges?"

You travel in air conditioned railway coaches and fly first class in planes even when you are not on official duty. It is us, the citizens of India who pay the fare for you.

Everyone, who is anybody, stakes his claim to fame by clamouring for "Z Class" security when the actual risk assessment for that person is zero. We, the people of India pay a fortune for your security.

Alas, what a travesty of our times. That you who should be protecting the nation are being protected by the common man at his cost.

There are people in India who cannot even afford one meal a day and do not even have the strength to complain about it. Sadly, while you enjoy a cup of coffee bought at a princely sum of Rupees One or a full meal at Rupees Twelve at the Parliament canteen in air conditioned comfort and cannot be bothered about these trivial issues.

When shall you pay the full cost of a meal without passing on the bill to your countrymen?

Sir, I am just an ordinary citizen of India who dutifully pays his Income tax, Service Tax, Value Added Tax, Wealth Tax, Corporation Tax, Automobile Registration Tax and Property Tax which goes up to nearly 50 percent of our hard earned money while you enjoy the benefits of these taxes and live a privileged life because every citizen of India pays for your privileges.

The day all of you forego and waive all the unnecessary perquisites bestowed upon you by laws enacted by you would be a proud one in our nation's history.

The day, you gentlemen who have been elected to power by the people to govern our nation become responsible citizens of INDIA will be a milestone in our history. That day, all of us will definitely waive off our gas subsidy.

Yours sincerely,

An honest and dutiful citizen.

(Sumith S. Rao is a well known city based businessman and a former President of the District Small Scale Industries Association)

HEARTFELT CONDOLENCES

Mr.M. Amuthan, Associate Professor and Head, Post Graduate Department of Microbiology, Sri Paramakalyani College, Alwarkurichi expired on 29th of May, 2015.

He was highly committed, knowledgeable and friendly. His academic service for more than 25 years was a boon for the upliftment of numerous students, especially of rural origin. He served in the various academic bodies of different universities. He was an active member of MUTA and held key positions also.

MUTA is deeply saddened by his loss and his kind face will remain forever in the hearts of every one of us.

Dr.S. Viswanathan
Sri Paramakalyani College

மெல்லச் சாகும் கல்வி சார்ந்த அறம்

பழ. நெடுமாறன்

தமிழ்நாட்டில் உயர்கல்வி ஆராய்ச்சி ஆகியவை எத்தகைய சீரழிவுக்கு உள்ளாகியிருக்கின்றன என்பது குறித்து பத்திரிகைகளில் அண்மையில் வெளியான செய்திகள் அனைவரையும் அதிரவைத்துள்ளன.

அந்த நாளில் பேராசிரியர்கள் மாணவர்களுக்கு நல்வழிகாட்டியாக திகழ்ந்ததோடு அறிவுச் செல்வத்தை வாரி வாரி வழங்கினார்கள். இந்நிலைமை ஏன் மாறிப்போயிற்று? துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் ஆகிய பதவிகள் விலைக்கு வாங்கப்படுகின்றன என்று பரவலாக குற்றம் சாட்டப்படுகின்றது. துணைவேந்தர்கள் தேர்வுக்குழுவில் அறிஞர்கள் இடம் பெறுவதற்கு பதில் கல்வி வணிகர்கள் இடம் பெறுகிறார்கள். அதைப்போல பேராசிரியர்கள் தேர்வுக்குழுவிலும் அவர்களே அங்கம் வகிக்கிறார்கள். அதனால்தான் பதவி ஏலம் விடப்படுவதாகவும் கோடிகோடியாக பணம் கொட்டிக் கொடுப்பவர்களுக்கு மட்டும் இப்பதவிகள் கிட்டுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

போதிய கல்வித்தகுதி எதுவுமில்லாமல் பணம் கொடுத்து பதவிகளை பெற்றிருப்பவர்கள் தாங்கள் கொடுத்த பணத்தை எப்படியும் ஈட்டியாக வேண்டும் என்று செயல்படுவது இயற்கை.

தங்களின் ஆய்வுச் சுருக்கத்தை அளிக்கும்போது வழிகாட்டும் பேராசிரியருக்கு மோதிரம் பரிசளிக்க வேண்டும். ஆய்வுப் பணியில் ஓராண்டு முடித்தபிறகு தங்களுடைய ஆய்வுப்பணியை சரி பார்ப்பதற்கு வரும் குழுவுக்கு ஆடம்பர விருந்து அளிக்கவேண்டும். ஆய்வேட்டை மதிப்பீடு செய்ய அனுப்பும்போது கணிசமான தொகையொன்றை பேராசிரியர், பதிவாளர், துணைவேந்தர் ஆகியோருக்கு அளிக்க வேண்டும். அப்போதுதான் ஆய்வேட்டுக்கான மதிப்பீடு செய்யப்படும். வாய்மொழித்தேர்வு நடக்கும்போது வழிகாட்டி பேராசிரியருக்கும் தேர்வாளர்களுக்கும் தனித்தனியே கையூட்டு கொடுக்க வேண்டும்.

இப்படியெல்லாம் வெளியில் பேசப்படாமல் ஒரு மிகப் பெரிய முறைகேடு கல்வித்துறையில் நடைபெறுவது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? முனைவர் பட்டங்களைப் பெறுவது போய் வாங்குகிற நிலைமை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறதே. இது முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறதா?

உயர்கல்வியும், சிறந்த ஆய்வுத்திறனும் நிறைந்த நாடு உலகில் உயர்ந்த இடத்தைப் பெறும். மேலிருந்து கீழ்வரையிலும் கல்வியைக் காசு சம்பாதிக்கும் கருவியாகப் பயன்படுத்தும் நாடு தன்னைத்தானே அழித்துக்கொள்ளும்.

நன்றி: *தினமணி*

உலக புத்தக தினம்

23.4.2015 அன்று மூட்டா, பாரதி புத்தகாலயம், தமுஎகச (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கம்) இணைந்து நெல்லை *மூட்டா* அலுவலகத்தில் உலக புத்தக தினம் கொண்டாடினர். எழுத்தாளர் இரா. **நாறும்பூநாதன்**, மனோதத்துவ நிபுணரும், எழுத்தாளருமாகிய **இராமானுஜன்** ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். *மூட்டா* மூன்றாம் மண்டல துணைத்தலைவர் முனைவர் **நசீர் அகமது** வரவேற்புரை ஆற்றினார். *மூட்டா* இதழ் முன்னாள் ஆசிரியரும், ம.சு. பல்கலைக்கழக முன்னாள் ஆட்சிக்குழு உறுப்பினருமான பேரா. **கே. சேவியர் அமல்ராஜ்** சிறப்புப் பேச்சாளர் இராமானுஜனுக்கு நினைவுப் பரிசு வழங்கினார். மூன்றாம் மண்டல செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் **கோமதி நாயகம்** நன்றி கூறினார்.

போராட்டக் களத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி மூட்டா கிளை

தமிழ் கார்க்கி

கடந்த சில ஆண்டுகளாகவே மதுரை அழகர்கோவில் சாலையில் உள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல நிறைவேற்றப்படாத கோரிக்கைகள் இருந்து வந்தன. அவற்றுள் முக்கியமானவை கீழ்வருமாறு:

1. அனைத்து உதவி ஆசிரியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்குதல்.
2. 2012 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட உதவி ஆசிரியர்களுக்கு பணி ஆணை வழங்குதல்
3. 2012 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட உதவி ஆசிரியர்களுக்கு விடுமுறை கால ஊதியம் கோருதல்
4. 2001 ஆம் ஆண்டு பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு இணைப் பேராசிரியராக பணி மேம்பாடு வழங்குதல்
5. 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு துணைப் பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற உதவி ஆசிரியர்களை பழைய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்
6. எம்.பி.ஏ. பாடப்பிரிவையும் பி.பி.ஏ. பாடப்பிரிவையும் ஒரே துறையின் கீழ் கொண்டு வருதல்.
7. சுற்றுலாத்துறை பேராசிரியர் முனைவர். பா. ஜார்ஜை ஆட்சிக்குழுவின் முடிவின்படி மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு மாற்றக் கோருதல்
8. 2012 ஆம் ஆண்டு நியமனத்தின் போது விடுபட்ட முனைவர் இரகுபதியை உதவி ஆசிரியராக பணி மேம்பாடு செய்தல்.

சென்ற கல்வியாண்டின் இறுதியில், 2012-ஆம் ஆண்டு பணி நியமனம் செய்யப்பட்ட உதவி ஆசிரியர்கள் 33 பேருடைய மனங்களிலே மிகப்பெரிய கேள்வி எழுந்தது. தங்களுக்கு விடுமுறை ஊதியம் வழங்கப்படுமா என்ற வினாதான் அது. இது மிகப்பெரிய மன உளைச்சலை உதவி ஆசிரியர்களின் மனங்களில் ஏற்படுத்தியது. மேலும் பணி நியமனத்தின் போது வழங்கப் படுகின்ற அடிப்படை நடைமுறையான பணி நியமன ஆணை கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த நடவடிக்கை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் விதிமுறைப்படி தவறானது.

உதவி ஆசிரியர்களிலேயே இன்னொரு பிரிவினர் 2010-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டவர்கள். இவர்களுடைய எண்ணிக்கை 15. கடந்த சில ஆண்டுகளாக எந்தவித ஆண்டு ஊதிய உயர்வுமின்றி இவ்வாசிரியர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார்கள். நடைமுறை யதார்த்தத்தில் விலைவாசி விண்ணை முட்ட உயர்ந்ததாலும் இவர்கள் பணி செய்யும் இடத்தில் ஊதிய உயர்வு என்பது இவர்கள் காணாதது.

இக்கல்லூரியில் மேலாண்மைத் துறையில் பி.பி.ஏ. பாடப்பிரிவு பல காலமாக இயங்கி வருகின்றது. இந்நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்ட எம்.பி.ஏ. பாடப்பிரிவு இயற்கை நியதியின்படி வணிக மேலாண்மைத்துறையின் கீழ் கொண்டுவரப்படாமல் தனித்து செயல்படுமாறு விடப்பட்டது. இதற்கு காரணம் வணிக மேலாண்மைத் துறையின் தலைவர் மூட்டா உறுப்பினராக இருப்பதுதான் என்று சொல்லப் படுகின்றது. எப்படியாயினும் இது முரண்பாடானதே.

போராட்டத்தை நோக்கி...

இதுகாறும் குறிப்பிட்டது தவிர தகுதிவாய்ந்த ஆசிரியர்களுக்கு பணிமேம்பாடு வழங்காதிருத்தல். பழைய ஓய்வூதிய திட்டத்தின் வரையறைக்குள் தகுதியான ஆசிரியர்களை கொண்டு வருதல், ஆட்சிக்குழு முடிவின்படியான முனைவர் பா. ஜார்ஜ் பணிமாற்றம் செய்யாதிருத்தல். முனைவர் இரகுபதியின் பணிமேம்பாடு போன்றவைகளும் தீர்க்கப்படா மலிருந்தன. இத்தகைய சூழலில்தான் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி மூட்டா கிளையின் பொறுப்பாளர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உள்ள கன்வீனர் குழுவையும் பதிவாளரையும் கல்லூரி முதல்வரையும் சந்தித்து கோரிக்கைகள் தொடர்பாக பல முறை பேசினர். ஆயினும் கோரிக்கைகள் தொடர்பாக கல்லூரி முதல்வர் பதிவாளரையும், பதிவாளர் முதல்வரையும் கைகாட்டிய வண்ணமே இருந்தனர். சிக்கல்கள் தீருவதாக தெரியவில்லை.

சூழ்நிலை இவ்வாறு மூட்டா கிளையை போராட்டப் பாதைக்கு தள்ளிக்கொண்டிருந்தது. ஆசிரியர்களின் நலனைப் பாதுகாக்க போராட்டத்தை கையிலெடுப்பதைத் தவிர வேறு

வழியில்லை என பொறுப்பாளர்களுக்கு புரிந்தது. பொறுப்பாளர்கள் மட்டுமின்றி கிளை உறுப்பினர்களும் இதற்கு ஏகமனமாக ஒப்புதல் வழங்கினர். 'மரங்கள் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதில்லை' என்பதற்கிணங்க நிலவி வந்த புறச்சூழல் இயக்கத்தை நடத்துமாறு மூட்டா கிளையை பணித்தது. போராட்டம் நடத்துவது என்ற முடிவும் எடுக்கப்பட்டது. 22-6-2015 துவங்கி ஒரு வார காலம் மதிய வேளையில் ஆர்ப்பாட்டம் நடத்திடுவது என கிளை பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

துவங்கியது ஆசிரியர் மாணவர் இயக்கம்

திங்கட்கிழமை 22.6.2015 அன்று முதலாம் மண்டல செயலர் முனைவர் ஏ.டி. செந்தாமரைக்கண்ணன் தலைமையில் மதிய வேளையில் சுமார் 1.20 மணிக்கு ஆர்ப்பாட்டம் எழுச்சியோடு துவங்கியது. கிளைப் பொறுப்பாளர்கள் பி. முருகேசன், கு. சுரேஷ்குமார், டி.ஆர்.என். சிவக்குமார் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை வழிநடத்தினர். இத்தகைய துவக்கத்தோடு நடந்த ஆர்ப்பாட்டம் இரண்டு வார காலங்கள் நடைபெற்றது. ஆசிரியர்கள் மாணவர்கள் நடத்திய கூட்டு போராட்டமாக இது விளங்கியது. இயக்கம் நடந்த இரண்டாவது வாரத்தில் மாணவர்கள் பேரணியாக சென்று மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியை அரசுக்கல்லூரியாக மாற்றிட வேண்டுமென்ற கோரிக்கையை மதுரை மாவட்ட ஆட்சியரிடம் தந்தனர். இதையொட்டி காவல்துறை 200 மாணவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக தமிழ் நாளிதழில் செய்தி வந்தது. இச்செய்தி வந்த மறுநாள், அதாவது 3.7.2015 அன்று மாணவர்கள் வீதிக்கு வந்து முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்யக்கோரி போராடினர். இந்திய மாணவர் சங்க பொறுப்பாளர்கள் இப்போராட்டத்தின்போது பேசினர். இச்சூழ்நிலையில் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் முனைவர். ச. இருளப்பன் கல்லூரி காலவரையின்றி மூடப்படுவதாக அறிவித்தார்.

கிடைத்தது பணிநியமன ஆணை

பிறகு மதுரை காமராசர் பல்கலைக்கழக பதிவாளரோடு நடந்த பேச்சு வார்த்தை மூட்டா தலைவரும் அய்பக்டோ துணைத்தலைவருமான பேரா. எஸ். விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் உடனடியாக 2012-ஆம் ஆண்டு பணி ஆணையின்றி பணியிலமர்த்தப்பட்ட 33 உதவி ஆசிரியர்களுக்கும் பணி ஆணை வழங்குவதோடு விடுமுறை கால பணி முறிவை ஒருநாளுக்கு மட்டும் வைத்துக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது. அதாவது கோடை விடுமுறை காலத்தில் ஊதிய இழப்பு ஒரு மாதத்திற்கு இல்லாமல் ஒரு நாளுக்கு மட்டுமே ஏற்படும். இத்தகைய ஊதிய இழப்பையும் மூட்டா ஏற்கவில்லையென்றபோதும் உதவி ஆசிரியர்களின் பணி நிலைமையில் இது ஒரு முன்னேற்றமே. வருங் காலங்களில் ஒருநாள் பணி முறிவும் அகற்றப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவை தவிர பிற கோரிக்கைகளை சிறிய கால அவகாசத்தில் நிறைவேற்றித் தருவதாக பல்கலைக்கழக நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது. இதனையடுத்து 10.7.2015 அன்று 33 உதவி ஆசிரியர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இதன் மூலம் உதவி ஆசிரியர்களின் வாழ்வில் ஒரு சிறிய ஒளிக்கீற்று தோன்றியுள்ளது. மற்ற கோரிக்கைகளை வென்றெடுக்க கிளை பொறுப்பாளர் களால் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரையிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியில் நடைபெற்ற போராட்டத்தினைத் தொடர்ந்து அக்கல்லூரியினுடைய மூட்டா கிளையில் உதவி ஆசிரியர்கள் நம்பிக்கையோடு உறுப்பினர்களாக இணைந்து வருகின்றனர். இது போராட்டப் பாதையில் ஒரு சிறிய மைல்கல் மட்டுமே. இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது. மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி மூட்டா கிளை ஆசிரியர் நலனுக்கான வெற்றிப் பாதையில் பீடு நடை போடட்டும்.

Congratulations

Ms. V. Leela, Associate Professor of Commerce, St. Judes College, Thoothur has been awarded the degree of **Doctor of Philosophy** in Commerce by the Manonmaniam Sundaranar University for her thesis entitled ***Tourism and its impact on Socio Economic conditions of Retailers and Street-vendors in Kanyakumari.***

MUTA wishes her success in all her academic endeavours.

Congratulations

Mr. U. Eswara Pillai, Assistant Professor of Sociology, S.T. Hindu College Nagercoil, has been awarded the degree of **Doctor of Philosophy** in Sociology by the Manonmaniam Sundaranar University for his thesis entitled ***Women and Self-Employment: An Analysis of Familial Implications.***

MUTA wishes him success in all his academic endeavours.

மறைந்து போன மாதிரிக் கல்லூரிகள்

ப.த. பால்பாண்டியன்
ஆசிரியர், *மூட்டா இதழ்*

மத்திய அரசின் 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டஅறிக்கையில் தேர்வு செய்யப்பட்ட மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் மாதிரிக் கல்லூரிகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. மொத்தம் 354 கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் (EBDS) ஆரம்பிக்கப்படும் கல்லூரிகள் மத்திய அரசின் 2.67 கோடி நிதி பெறவும், 5.33 கோடி மாநில அரசின் பங்காக இருக்க வேண்டும் என்று மாநிலங்களுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு உரிய கருத்துருவை பல்கலைக்கழக மானியக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று தகவல் கொடுக்கப்பட்டு மொத்தம் 8 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் இவ்வகை கல்லூரிகளுக்கு தொடர் செலவினங்களுக்காக ஐந்தாண்டு களுக்கு நிதி உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியர் அலுவலர் சம்பளம் போன்ற தொடர் செலவினங் களுக்காக ஏற்படும் செலவை முதல் ஐந்தாண்டுகளுக்கு மத்திய அரசு (மாதிரிக்கல்லூரி திட்டம்) யுஜிசி மூலமாக ஏற்கும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் முழுப்பயனை சில பல்கலைக் கழகங்கள் 'மாதிரி உறுப்புக் கல்லூரிகள்' அமைத்து 2010-ஆம் ஆண்டு பயன்பெற்றன என்று கூறப்படுகிறது.

திமுக அரசு 2011 பிப்ரவரி மாதம் ஒரு அரசாணை வெளியிட்டது. அதில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் நாகலாபுரம் கிராமத்தில் (மசு பல்கலைக்கழகப் பகுதி) மாதிரி உறுப்புக் கல்லூரி தொடங்க அரசு அனுமதித்திருந்தது. இதே மாதிரி அனைத்துப் பல்கலைக்கழகப் பகுதிகளிலும் மாதிரி உறுப்புக்கல்லூரிகள் அமைக்க அனுமதி கொடுத்தது மட்டுமல்லாமல் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் கட்டிட வகைக்காக ஒரு கோடி ரூபாய் வீதம் நிதி உதவி செய்தது.

2011 மே மாதம் புதிய அரசு பதவி ஏற்றபின் இவ்வாணை கிணற்றில் போட்ட கல் மாதிரி அசைவில்லாமல் செயலற்று இருந்தது. அந்தந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களின் முயற்சியால் கல்லூரிகளைத் திறப்பதற்கு அரசுக்கு நிர்ப்பந்தம் ஆனவுடன் பழைய அரசு அனுமதி அளித்த 8 கல்லூரிகளுடன் ஸ்ரீரங்கத்தையும் சேர்த்து புதிய அரசு ஒன்பது கல்லூரிகளாக உயர்த்தி 2011-12 கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை நடைபெற்றது. ம.சு. பல்கலைக்கழகம் மாதிரியான சில பல்கலைக்கழகங்கள் இக்கல்லூரிகள் மீது எவ்வித அக்கறையும் காட்டாமல்

பல்கலைக்கழகக் கல்லூரிகள் மாதிரி இவற்றை நடத்தி வருகின்றன. அரசு கல்லூரிகள் போல் அல்லாமல் அவர்களாகவே கட்டணம் நிர்ணயம் செய்து, ஆசிரியர்களை தற்காலிக ஆசிரியர்களாக நியமனம் செய்தனர். Dated Appointments, Hour Basis Appointments, Consolidated Pay Appointments என ஆசிரியர்களை பல கூறாகப் பிரித்து நியமனம் நடைபெற்றது. மத்திய அரசின் நிதியைப் பெறவோ அல்லது தாங்களாக கட்டிடம் கட்டவோ கருத்துடன் முயற்சி செய்யாததன் விளைவு - மாதிரிக் கல்லூரிகள் மட்டமான கல்லூரிகள் என்று பொதுமக்களையும் மாணவர்களையும் நினைக்க வைத்தது. அரசும் GO போடுவதுடன் தங்கள் பணி நிறைவடைந்து விட்டதாக நினைத்துக் கொண்டது போலும். அரசு மற்றும் பல்கலைக்கழகங்களின் அலட்சிய போக்கை RUSA அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய மாநில அரசு தன் குறைக்கு 2012-13 கல்வியாண்டில் மசு பல்கலைக்கழகப் பகுதியில் கடையநல்லூர், கன்னியாகுமரி என்று மேலும் புதிய கல்லூரிகளைத் துவக்கிவிட்டு மேற்கொண்டு எந்த நிதியையும் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்காமல் பல்கலைக்கழக நிதிச்சுமையை அதிகரித்தது. நிதிப் பற்றாக்குறையாலும், நிர்வாகச் சீர்கேடுகளினாலும் நசுங்கிப் போயிருக்கும் ம.சு. பல்கலைக் கழகம்தான் அதிகமான பாதிப்புக்கு உள்ளானது. இதில் வேடிக்கை என்னவெனில் மாநில அரசு தன் பங்கான 5.33 கோடியை செலவழிக்காமல் 2.67 கோடியை மத்திய அரசிடம் கேட்டதாகக் கேள்வி. பின்னர் அரசு இவ்வகையான மாதிரி உறுப்புக் கல்லூரிகளுக்கு ஒரு புதிய திட்டத்தை ஆணையாக வெளியிட்டது. அதில் Capital Cost இரு பங்கு என்பதற்குப் பதிலாக மூன்று பங்காக்கி (மத்திய அரசு, மாநில அரசு, பல்கலைக்கழகம்) தன் பங்கை முன்பு கொடுத்த ஒரு கோடியை கழித்து விட்டு மீதிப்பணத்தை கொடுத்ததாக செய்தி.

இத்திட்டத்தின்படி நாகலாபுரம் கிராமத்தில் கட்டிட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் பல்கலைக்கழக பங்கு அளிக்கப்பட்டதா, யுஜிசி மத்திய அரசு நிதி பெறப்பட்டதா என்பது மர்ம முடிச்சு. RUSA நிதி மூலம் ஒரு கல்லூரிக்கு ரூ. 2 கோடி வீதம்



தமிழகத்தில் உள்ள 21 மாதிரிக் கல்லூரிகளுக்கு கடந்த மார்ச் மாதமே மத்திய அரசு நிதி அனுமதி வழங்கியதாக நம்பத்தக்க ஆதாரம் உள்ளது. மூன்று ஆண்டுகள் முடிவடைந்த பின்னரும் கட்டிடம் முழுமையாக முடிவடையாமல் எலும்புக்கூடாக காட்சி அளிக்கிறது. இது ஒருபுறமிருக்க, எந்த ஊரிலும் நடைபெறாத ஒரு அதிசயம் நாகலாபுரத்தில் நிகழ்ந்தது. சாதி, சமயம், அரசியல் பேதமின்றி அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி 'கல்லூரி வளர்ச்சிக்குழு' என்கிற அமைப்பு ரூ. 50 லட்சத்தை பொதுமக்களிடம் வசூல் செய்து 2011-ஆம் வருடமே அப்போதைய தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்து 'நமக்கு நாமே' திட்டத்தில் 1½ கோடி திட்டத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்தது. இது மட்டுமல்லாது 19 ஏக்கர் 20 சென்ட் நிலத்தை அரசுக்கு பொது மக்கள் தானமாகக் கொடுத்துள்ளார்கள் என்பது பாராட்டத்தக்க அம்சம். நாகலாபுரம் வட்டார மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள்; தலித் மக்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ள பகுதி; பணம் கொடுத்த பாமர மக்கள் பரிதவிக்கிறார்கள் கல்லூரி நிலையை எண்ணி!

இதில் வேதனையுடன் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், ம.சு. பல்கலைக்கழக மற்றும் உறுப்புக் கல்லூரிகளுக்கு வருடம் ஒருவர் என்று நான்கு ஆண்டுகளில் ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்படுகிறார்கள். இந்த நான்கு ஆண்டுகளில் - பொறுப்பு பதிவாளர்கள் உட்பட பதிவாளர்கள் ஐந்து, இரு கன்வீனர் கமிட்டி, இரண்டு துணைவேந்தர்கள்! நிர்வாக மாற்றங்களினாலும், இக்கல்லூரிகளை கவனிக்கும் பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவுகள் மூன்று முறை மாற்றப்பட்ட காரணங்களினால் 'மாதிரிக்கல்லூரி நிதியை' பெறும் முயற்சியை எவரும் எடுக்கவில்லை, அக்கறையும் காட்டவில்லை. இம்மாதிரியான கல்லூரிகளை அரசு ஏற்க வேண்டும் என்று ஒருபுறம் மூட்டா போன்ற சங்கங்கள் முழு வீச்சில் போராடிக் கொண்டிருக்க, ம.சு. பல்கலைக்கழக நிர்வாகம் கண்டுகொள்ளாமல் இருந்தால் அரசு தானாக எடுத்துக்கொள்ளும் என்று பகற்கனவு கண்டுகொண்டிருக்கிறது!

திறமையான ஆசிரியர்களையும், வேலைக் கலாச்சாரம் மிக்க அனுபவமிக்க அலுவலர்களையும் கொண்டுள்ள ம.சு. பல்கலைக்கழக நிர்வாகம் பொதுமக்கள் கொடுத்த பணத்தில்கூட கட்டிடம் கட்ட ஆரம்பிப்பதற்கு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. 'நமக்கு நாமே' திட்டத்தில் கட்டி முடிப்பதாகக் குறிப்பிட்ட நாள் ஜூன் 2015, மாதிரிக்கல்லூரி நிதியில் கட்டப்படும் கட்டிடங்களின் நிலைதான் இக்கட்டிடத்திற்கும்!

இதில் வேடிக்கை என்னவெனில் 2 batches மாணவ மாணவியர் படிப்பை முடித்துச் சென்றுவிட்டனர். பொதுமக்களின் முயற்சியினால் விளாத்திகுளம் ரோட்டில் ஒரு வாடகைக் கட்டிடம் பிடித்து அதில் உள்கட்டமைப்பு, பராமரிப்பு உட்பட செலவுகளை ஏற்றுக்கொண்டு கல்லூரி நடைபெறுகிறது.

அக்கட்டிடத்தை அடி மாட்டு விலையில் வாடகைக்கு வெறும் ரூ. 5000 மாதமொன்றுக்கு ஒப்பந்தம் செய்து கடந்த ஏப்ரல் வரை நான்கு ஆண்டுகளாக பல்கலைக்கழகம் கடத்தியது மட்டுமல்லாமல், அந்த கட்டிட உரிமையாளரை அலைக்கழித்ததுதான் மிச்சம். இறுதியில் வேறு வழியின்றி கட்டிட உரிமையாளர் கேட்டை இழுத்துப் பூட்டி விட்டார் என்று இந்து ஆங்கில நாளிதழ் உட்பட பல பத்திரிக்கைகள் செய்தி வெளியிட்டுள்ளன. பொதுமக்களும், பல்கலைக்கழக அதிகாரிகளும், ஊர் பெரியவர்களும் தலையிட்டு பின்னர் கேட் திறந்ததாக தகவல் (இதுமாதிரியான நிகழ்வு சங்கரன்கோவிலில் ஏற்கனவே நடந்துள்ளது. கடையநல்லூரில் ம.சு.ப. கல்லூரியை காலி செய்ய இட உரிமையாளர் நீதிமன்ற ஆணை பெற்றிருப்பதாக செய்தி வெளியாகி உள்ளது).

மாவட்ட நிர்வாகமும் பொதுமக்கள் கட்டிட வகைக்குத் திரட்டிக் கொடுத்த பணத்தை "நமக்கு நாமே" திட்டத்தில் மிகவும் காலம் தாழ்த்திச் செலவழிக்க ஆரம்பித்தது மட்டுமல்லாது "Port Trust" மூலம் பொதுமக்கள் பெற்றுத்தந்த ரூ.33 இலட்சத்தை மிகவும் காலதாமதமாகப் பெற்றதாகக் கேள்வி! இவ்வளவு சிரமப்பட்டு பணத்தையும் அரசிடம் கொடுத்து தங்கள் குழந்தைகள் சிறப்பான கட்டமைப்பு உள்ள அரசு கல்லூரியில் படிக்கும் நாளை வருடக்கணக்கில் ஆவலுடன் காத்திருக்கும் பொதுமக்களுக்கு விரக்திதான் மிச்சம்.

இக்கல்லூரிகள் பல்கலைக் கழகத்திற்கு சுமை என்று ஆசிரியர்களையும், அலுவலர்களையும் இவைகளுக்கு எதிராக திருப்பி விடுவது சிலருக்கு வாடிக்கையாகி விட்டது. பல்கலைக்கழக அலுவலர்கள் பிரச்சனையும் தீர்க்க முடியாமல் ம.சு. பல்கலைக்கழக துறைகளில் மாணவர் சேர்க்கையை வெகுவாக குறைத்து அரசின் தொலைநோக்குப்பார்வைக்கு (?) எதிராக மசு நிர்வாகம் செயல்பட்டு வருகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அரசு ஏற்கும் வரை அல்லது நிதிஉதவி கிடைக்கும் வரை மனோ கல்லூரிகள் என்று அழைக்கப்படும் பல்கலைக்கழக கல்லூரிகள், உறுப்புக்கல்லூரிகள், நாகலாபுரம் கல்லூரி மாதிரியான 'மாதிரி உறுப்புக் கல்லூரிகள்' இவற்றை மேம்படுத்த தயாராக இருக்கும் அந்தந்த பகுதியில் உள்ள பொது மக்களோடு இணைந்து பல்கலைக்கழக நிர்வாகம் களப்பணியிலும் கருத்துரு தொடர்ந்து அனுப்பி அவைகளைப் பின்தொடர்ந்து செயல்வடிவம் பெற கடுமையாக உழைத்தால் ஒழிய இக்கல்லூரி வளர்ச்சியும், மிகவும் பின்தங்கிய பகுதியில் வாழும் மாணவர் கல்வியும் மிகப் பெரிய கேள்விக்குறி தான்! தான் பெற்ற பிள்ளையை செவிலித்தாயிடம் வளர்க்கக் கொடுப்பது போல் அரசு கல்லூரிகளை ஆரம்பித்துவிட்டு பல்கலைக்கழகங்கள் நிர்வாகத்தில் விடுவதும், பின்னர் நிதி வழங்காமலிருப்பதும் மாணவ மாணவியரின் உயர்கல்வியில் அரசு அக்கறை காட்டவில்லை என்பதைத்தான் குறிக்கிறது.

மூட்டா சேமநலநிதித் திட்டம்...

31-12-2014 படி நம் மன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் சுமார் 2500 பேர். மூட்டா சேமநலநிதித் திட்டத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை, இதில் பாதி தான் என்பது மிகவும் வருந்தத்தக்க செய்தி.

இத்திட்டத்தில் சேர்ந்ததால் பலனடைந்த குடும்பங்கள் ஏராளம். மூட்டா இதழை தொடர்ந்து படித்து வந்தால் எத்தனை உறுப்பினர்களை நாம் வருடந்தோறும் இழக்கிறோம்; எத்தனை உறுப்பினர்கள் குடும்பங்கள் சேமநலநிதி பெறுகிறார்கள் என்ற உண்மை நிலவரம் அறியலாம்.

சேமநல நிதித் திட்டத்தில் அனைவரும் உறுப்பினர்களாக இருந்தால் மட்டுமே, இத்திட்டம் முழுமையாகவும், வெற்றிகரமாகவும் செயல்பட முடியும் என்ற உண்மையை புரிந்துகொள்ளுங்கள். இத்திட்டத்தில் சேராத உறுப்பினர்கள் அனைவரும் இத்திட்டத்தில் சேருவதை நம் சங்கக் கடமையென உறுதிபூண்டு, உடனடியாகச் சேருமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விபரங்களுக்கு உங்கள் கல்லூரிக் கிளைச் செயலரை உடனே அணுகவும். இத்திட்டம் பற்றி கூடுதல் தகவல் பெற நம் மன்றத்தின் மத்திய பொருளாளரைத் தொடர்பு கொள்ளவும்.

R. பாண்டி
(பொருளாளர், மூட்டா)
23/11, 8வது வார்டு மல்லையன் தெரு,
போடிநாயக்கனூர்,
தேனி மாவட்டம்.
அலைபேசி: 9443180598

Congratulations

Ms. K. Anushiya Devi, Associate Professor of Computer Science, S.T. Hindu College, Nagercoil has been awarded the degree of **Doctor of Philosophy** in Computer Science by the Manonmaniam Sundaranar University for her thesis entitled ***Computer Simulation Models to Explain the factors on Menstrual Cycle.***

MUTA wishes her success in all her academic endeavours.

ஐ.ஐ.எம். நிறுவன மசோதா அவசியமானதா?

எந்த ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பான செயல்பாட்டுக்கும் ஆதாரமானது அதன் சுதந்திரத் தன்மை. கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை இந்தக் கூற்று 100% பொருந்தும். ஆனால், ஸ்மிருதி இரானி தலைமையிலான மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கொண்டுவர முயற்சி செய்யும் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவன மசோதா, அடிப்படையான இந்த விஷயத்தையே நீர்த்துப்போகச் செய்துவிடும் என்ற குரல்கள் எழுந்திருக்கின்றன. சந்தைப் பொருளாதார மாதிரியை இந்தியா பின்பற்றத் தொடங்குவதற்கு வெகு காலத்துக்கு முன்பே தொடங்கப்பட்ட ஐஐஎம் கொல்கத்தா, ஐஐஎம் அகமதாபாத், ஐஐஎம் பெங்களூரு ஆகியவை, சோஷலிஸ செயல்திட்டத்தின் அடிப்படையில் திட்டக் குழுவின் பரிந்துரைகளுடன் உருவானவை. சர்வதேச அளவில் நன்கு அறியப்பட்ட இந்திய நிறுவனங்கள் எனும் பெயரை இவை பெற்றிருக்கின்றன. இவற்றின் வளர்ச்சிக்கு மிக முக்கியக் காரணம், அவற்றுக்கு அளிக்கப்பட்ட தன்னாட்சி அங்கீகாரம்தான்.

தற்போது பொதுமக்களின் கருத்துகளைப் பெறுவதற்காக, ஐஐஎம் கல்வி நிறுவன வரைவு மசோதா வெளியிடப்பட்டிருக்கிறது. இம்மசோதா நிறைவேற்றப்பட்டால், நாட்டில் உள்ள 13 ஐஐஎம் நிறுவனங்களின் செயல்பாடுகள் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் சென்று விடும். அதன் பின்னர், இந்நிறுவனங்களின் கல்விக் கட்டணம், பேராசிரியர்களுக்கான ஊதியம் உள்ளிட்ட எந்த விஷயமானாலும் அரசின் அனுமதியைப் பெறாமல் செயல் வடிவம் பெறாது. பெரும்பாலான ஐஐஎம் நிறுவனங்கள் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன.

ஐமு கூட்டணி ஆட்சியில் மனிதவள மேம்பாட்டு அமைச்சராகப் பதவி வகித்த கபில் சிபல் தொடங்கிவைத்த சிக்கல் இது. ஐஐஎம்-மைத் தனியார்மயமாக்க நியமித்த குழு அப்போதே சர்ச்சைக்குள்ளானது. முந்தைய அரசின் செயல்பாடுகளை விமர்சித்து வரும் பாஜக அரசு இவ்விவகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறது. இம்மசோதாவின் வரம்புக்குள் பிற தனியார் மேலாண்மை நிறுவனங்களும் வருமானால், ஐஐஎம் நிறுவனங்களின் சுதந்திரம் நீர்த்துப்போகும் அபாயமுள்ளது.

அரசின் கட்டுப்பாட்டுக்குள் வரும் பட்சத்தில் இந்நிறுவனங்களை ஆகச் சிறந்த கல்வி அமைப்புகளாக அப்படியே தொடர முடியுமா

என்பதுதான் தற்போதைய முக்கியக் கேள்வி. ஐஐஎம் நிறுவனங்களின் செயல்பாடுகளைத் தொலைவில் இருந்து அரசு கண்காணிப்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இந்நிறுவனங்களைக் கொண்டுவருவதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்று அகமதாபாத் ஐஐஎம் கல்வி நிறுவன இயக்குநர் ஆசிஷ் நந்தா சுட்டிக்காட்டியிருக்கிறார். உலகத் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள சிறந்த 100 கல்வி நிறுவனங்களில் இந்திய அரசின் நிர்வாகத்தில் உள்ள ஒரு நிறுவனம்கூட இதுவரை இடம்பிடித்ததில்லை. இருக்கும் கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதுதான் அரசின் முக்கியக் கடமை. அவற்றின் சுதந்திரத்தில் தலையிடுவது அல்ல. மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டிய முக்கிய விஷயம் இது.

நன்றி: ***தி இந்து (தமிழ்)*** 25.06.2015

ஜூலை 15: கல்வி வளர்ச்சி நாள்

கல்விக்கண் திறந்த கருமவீரர் காமராஜரின் பிறந்த நாளை வருடந்தோறும் அரசு 'கல்வி வளர்ச்சி நாளாக' கொண்டாடுவது வரவேற்கத்தக்கது. என்றாலும் வெறும் கொண்டாட்டமாக இருந்துவருவது வேதனை தரும் விஷயம் ராஜாஜி ஆட்சியில் மூடப்பட்ட 6000 பள்ளிகளையும், மேலும் 14000 புதிய பள்ளிகளையும் காமராஜர் தனது ஆட்சிக்காலத்தில் திறந்து வைத்தார். உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 650-லிருந்து 2200-க்கு மேல் போனது. மாணவர்களின் எண்ணிக்கை பத்து மடங்காக உயர்ந்தது. ஆனால் இன்றைய தமிழகத்தில் 'குடி' மக்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. குடிக்கும் மக்களை என்றைக்கு இந்த அரசாங்கம் படிக்கும் மக்களாக மாற்றப்போகிறது? எத்தனை சசிபெருமாள்களை நாம் இழக்க வேண்டியிருக்கப் போகிறதோ தெரியவில்லை.

காமராசர் மக்களைப் பற்றிச் சிந்தித்தார். மாணவர்களின் கல்வி பற்றியும், அதை வழங்கும் ஆசிரியர்களைப் பற்றி சிந்தித்தார். அதனால்தான் எல்லா ஆசிரியர்களுக்கும் பென்ஷன் வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டு, 1955-ம் ஆண்டிலேயே இத்திட்டத்தின் நன்மைகளை தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பெற்றார்கள். 1958-ம் ஆண்டு இது உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

ஆதாரம்: **நாகூர் ரூமி**யின் நூல் ***காமராஜ்***

பேராசிரியர் வி. சண்முகசுந்தரம் நினைவுநாள் நிகழ்ச்சிகள்

வருடந்தோறும் பேரா. வி. சண்முக சுந்தரம் நினைவு நாளை (ஜூலை 13) நம் மன்ற தியாகிகள் தினமாக கடைபிடித்து வருகிறோம். சங்கத் தலைவர்களின் தியாக வரலாற்றையும், சங்கம் சந்தித்த சவால்கள், சாதித்த சாதனைகள் ஆகியவற்றையும் உறுப்பினர்களிடையே கொண்டு செல்வதுதான் இத்தினத்தின் முக்கிய நோக்கம். இவ்வகையில் இவ்வாண்டும் மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் அலுவலகங்களில் மாலை 6 மணிக்கு சங்கக் கொடியேற்றமும், சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

மதுரை

பேரா. சண்முக சுந்தரம் நினைவு நாள் நிகழ்வுகள் மன்றக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. மதுரை காமராசர் பல்கலைக்கழக மேனாள் ஆட்சிக் குழு உறுப்பினரும், நம் மன்றத்தின் கல்விக் குழு தலைவருமான ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் சி. சந்திரகுரு கொடியேற்றி வைத்து நினைவு நாள் உரையாற்றினார். நம் மன்ற உறுப்பினர்கள் 70 பேர் கலந்து கொண்டு மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் நடைபெற்ற நினைவு நாள் சிறப்புக் கூட்டத்தில் அகில இந்திய அறிவியல் இயக்க துணைத் தலைவர் திரு. இராஜமாணிக்கம், "அறிவியல் மனோபாவம்" என்ற தலைப்பில் உரையாற்றினார். மூட்டா இரண்டாம் மண்டலத் தலைவர் பேரா. எஸ். கல்யாண ராமன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முதலாம் மண்டலச் செயலர் பேரா. செந்தாமரைக் கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். இரண்டாம் மண்டல பொருளாளர் பேராசிரியர் E.B. பலராமன் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

திருநெல்வேலி

திருநெல்வேலியில் நடைபெற்ற கொடியேற்று விழாவில் ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி கல்லூரி முன்னாள் உடற்கல்வி இயக்குநரும் மூட்டா மூன்றாம் மண்டல முன்னாள் பொருளாளருமான முனைவர். வி. பெருமாள் மன்றக் கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தினார். பின்னர் நடைபெற்ற அரங்கக் கூட்டத்தில் "தொழிலாளர் உரிமை" என்ற தலைப்பில் சிஐயுடி தொழிற்சங்க மாநிலச் செயலாளர் ஆர். மோகன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மூன்றாம் மண்டலத் தலைவர் முனைவர். ஆர். முருகேசன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், பொதுச் செயலர் பேரா. எஸ். சுப்பாராஜு வாழ்த்துரை வழங்கினார். மண்டலப் பொருளாளர் முனைவர். பாலு நன்றியுரை நிகழ்த்தினார். முன்னதாக மண்டலச் செயலர் முனைவர். நவநீதகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். மன்ற உறுப்பினர்கள் 75 பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நான்காம் மண்டலம் சார்பில் பேராசிரியர் வி. சண்முகசுந்தரம் நினைவுநாள் கருத்தரங்கம்

ஜி. ஐசக் அருள்தாஸ்
பொருளர் - நான்காம் மண்டலம்

இவ்வருட வி.எஸ். நினைவு நாள் கருத்தரங்கை மூட்டா நான்காம் மண்டலம் 'கருத்துரிமை மீதான தாக்குதல்கள்' என்ற பொருளில் நடத்தியது. இக்கருத்தரங்கானது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலகக் கட்டிடத்தில் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. மூட்டாவின் முன்னாள் தலைவர் பேரா. அனந்த கிருஷ்ணன் அவர்கள் மூட்டா கொடியை ஏற்றி வைத்து,. இன்றைய பேராசிரியர்களின் நல்வாழ்வுக்காக பேரா. சண்முக சுந்தரம் அவர்கள் ஆற்றிய பணிகளை எடுத்துரைத்தார். மூட்டா உறுப்பினர்கள் பெருந்திரளாகக் கூடி கொடிக்கு மரியாதை செலுத்தினார்கள். கொடி ஏற்ற நிகழ்வின் தொடக்கத்திலும் நிறைவிலும் பேரா. கணேசன் அவர்கள் கோஷம் எழுப்பி உற்சாகப்படுத்தினார்.

கருத்தரங்கிற்கு நான்காம் மண்டலத் தலைவர் பேரா. ரெத்தின சிகாமணி தலைமை தாங்கினார். கருத்தரங்கிற்கு வருகை தந்தவர்களை நான்காம் மண்டலச் செயலர் பேரா. நாகராசன் வரவேற்றார். கருத்தரங்கினை மூட்டாவின் தலைவர் பேரா. மனோகர் ஜஸ்டஸ் தொடங்கி வைத்தார். துவக்க உரையில் இன்றைய கூட்டுப் போராட்டங்களுக்கும் பன்முகப் போராட்டங்களுக்கும் அடித்தளமிட்டவர் சண்முக சுந்தரம் என்பதை சான்றுகளுடன் விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் தலைவர் ச. தமிழ்ச்செல்வன் அவர்கள் மேற்கூறிய தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அவர் தன்னுடைய உரையில் பல கருத்துக்களை வரிசைப்படுத்தினார். இன்றைய வர்க்கப் போராட்டத்தில் நடுத்தர மக்களின் உணர்வுகளை மதித்து அவர்களை ஒன்றிணைத்து போராட்ட வடிவங்களில் மக்களை இணைத்தது மூட்டா என்றும், இன்றைய சூழலில் கருத்துச் சுதந்திரம் பல்வகையில் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை விட ஆதிக்கச் சக்தியினால் பிடுங்கப் பட்டுள்ளது என்று கூறினார். மாதொருபாகன் நாவலை எழுதிய பெருமாள் முருகன் நான்கு ஆண்டுகள் கழித்துத் தண்டிக்கப் பட்டு பல்வேறு மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளார். அரசு இயந்திரம் அவருக்கு துணையாக இருக்கவில்லை என்பதை உரிய சான்றுகளுடன் எடுத்துரைத்தார். கோவையில் இஸ்லாமியர்கள் தவறாக குற்றச்சாட்டின் பெயரில் துன்புறுத்தப் பட்டதை சம்சுதீன் என்பவர் "மௌனத்தின் சாட்சிகள்" என்ற

தலைப்பில் நாவல் எழுதியமையையும் சுட்டினார். சென்னை ஐ.ஐ.டி-யில் அம்பேத்கர் - பெரியார் வாசகர் வட்டத்தைச் சார்ந்தோர், கருத்துச் சுதந்திரத்திற்காகப் போராடி பெற வேண்டிய கட்டாயச் சூழல்களை விளக்கினார். இவை அனைத்தும் மிகப்பெரும் திட்டத்துடன் உருவாக்கப்பட்டவை. நாட்டின் பல பகுதிகளில் மக்கள் அமைதியாக வாழ்ந்தால் சாதி அல்லது சமயம் என்பதை அவர்களுக்கு ஊட்டி கலவரத்தைத் தூண்டும் வண்ணம் செயல்படும் கூட்டத்தை கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் கும்பலை பேராசிரியர்கள் அடையாளம் காணவேண்டும். சமூகத்தில் உண்மைக்குப் புறம்பான செய்திகள் பொதுநிலை ஊடகங்கள் மூலம் மக்களை சென்றடையச் செய்யும் தந்திரத்தை ஆதிக்க மக்கள் செய்து வருகின்றனர். அரசு இயந்திரமானது வரலாற்றில் கைவைத்து பொய்களை உண்மையாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இவற்றோடு எவ்வித சமரசமும் செய்யாமல் முற்போக்கு அமைப்புகள் தொடர்ந்து போராடி வருகின்றன. பேராசிரியர்களாகிய நீங்கள் பொய்களை மறுத்து உண்மையினை எழுதி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழனின் தத்துவத்தை பாரெங்கும் பரப்ப முயல வேண்டும் என பல்வகை கருத்துக்களை எடுத்துரைத்தார்.

நிறைவில் நான்காம் மண்டல பொருளர் பேரா. ஜி. ஐசக் அருள்தாஸ் நன்றிகூற கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

கண்ணீர் அஞ்சலி

மதுரையிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி பொருளாதாரத் துறையில் பணியாற்றி வந்த பேரா. மா. புகழேந்திரன் 6.7.2015 அன்று காலமானார். 2012-ஆம் ஆண்டு இக்கல்லூரியில் இணைந்தவர். அதற்கு முன்பு மதுரையிலுள்ள ஆயிர வைசியக் கல்லூரியில் பணியாற்றிய போதே அக்கல்லூரியின் மூட்டா கிளையின் பொறுப்பாளராக இருந்தார். பழகுவதற்கு இனிமையான குணம் கொண்டவர். நண்பர்களுக்கும் *மூட்டா* ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

எம். எஸ். வி. என்ற "விஸ்வ" நாதம்

மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் எழுப்பிய ஓசை தமிழக மக்களின் காதுகளில் பல காலங்களாக தேனாகப் பாய்ந்து இனிமை கொடுத்து வந்தது. ஆயிரக்கணக்கான பாடல்களுக்கு திரை இசை அமைத்து தனக்கென முத்திரை பதித்த இசை மாமேதை எம்.எஸ்.வி. இசை அமைப்பாளர் ராமமூர்த்தியுடன் இணைந்து அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்த அவரின் கீதங்கள் பிற்காலத்திலும் தமிழ் இசைப்பிரியர்களை மகிழ்வித்தது.

கர்நாடக இசையின் பிடியிலிருந்த சினிமாப் பாடல்களை சாமானியர்கள் ரசிக்கும் மெல்லிசையாக மாற்றிப் புரட்சி செய்தவர் எம்.எஸ்.வி. அவருடைய இசை என்ற மந்திரத்தில் மயங்கிப் போயிருந்த தமிழ் சினிமா ரசிகர்கள் மட்டுமல்லாது தென்னிந்திய திரை உலகமே அவரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ந்து போனது. "எம்.எஸ்.வி. அவர்கள் பாடல்களுக்கு ஏற்ற இசையை வழங்குவதில் வல்லவர். இசைக்கேற்ற வரிகளையும், வார்த்தைகளையும் தரக்கூடிய திறமை மிக்கவர்" என்று இந்து ஆங்கில நாளிதழ் அவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளது. பாடலா, இசையா என்று தெரியாவண்ணம் திரைப்படப் பாடல்களில் அவருடைய இசை இணைந்து ஒலித்தது. சமீபத்தில் ம.சு. பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமைப்பட்டுக் கொண்டது.

அவரின் நினைவுகள் தமிழக மக்களின் மனங்களில் என்றும் இனிய கீதங்களாக வாழ்ந்து கொண்டேயிருக்கும். தமிழ்த்தாய் வாழ்த்து கேட்கும் போதெல்லாம் மெல்லிசை மன்னரின் இசை நினைவுகள் வந்து கொண்டேயிருக்கும்.

- முபாரகி

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்

- ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

மூட்டா உடற்கல்வி இயக்குநர்களுக்கு ம.சு. பல்கலைக்கழக சிறப்பு விருதுகள்



நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வெகுகாலமாகவே கல்லூரிகளிலிருந்து பல்கலைக்கழக அணிகளுக்கான மாணவ, மாணவியரைத் தேர்வு செய்வதும், மாணவ, மாணவியருக்கு பல்கலைக்கழகம் வழங்கும் Form-3 சான்றிதழ் பெறுவதும் கடினமாக இருந்தது. மூட்டாவின் முன் முயற்சியால் விளையாட்டுத் துறைக்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்பட்டு அதில் கல்லூரிகளில் மூத்த உடற்கல்வி இயக்குநர்களும் சேர்க்கப்பட்டனர். இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு கல்லூரிப் பணிகளோடு, பல்கலைக்கழகப் பணிகளை மேற்கொண்டவர்கள் திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முனைவர். டி. ஜிம் ரீவ்ஸ் சைலன்ட் நைட், பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முனைவர். லாரன்ஸ் செல்வராஜ் மற்றும் மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறித்துவக் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முனைவர். டேனியல் பேரின்பராஜ் ஆகியோர். இவர்கள் மூவரும் ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர். ராதாகிருஷ்ணன் மற்ற கல்லூரிகளின் உடற்கல்வி இயக்குநர்களோடு இணைந்து 2013-14, 2014-15 ஆகிய இரு கல்வியாண்டுகளில் மாணவர் நலன் காத்தமைக்கும், குறுகிய கால அவகாசத்தில் அனைத்து விளையாட்டுப் போட்டிகளையும் திறம்பட நடத்தி முடித்தமைக்கும் பாராட்டு தெரிவித்து சிறப்பு விருதுகள் 22-6-15 அன்று துணைவேந்தர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாணவர் நலன் காத்த நம் மன்ற உடற்கல்வி இயக்குநர்களுக்கு மூட்டா இதழின் பாராட்டுக்கள்!

காசில்லாம இருந்தா ஏன் அப்பா ஆகணும்...?

கே. ராஜு
முன்னாள் தலைவர் மற்றும்
பொதுச்செயலாளர், *மூட்டா*

திருச்சி நேஷனல் கல்லூரியில் எம்.எஸ்.ஸி. இயற்பியல் முடித்த கையோடு விருதுநகர் செந்திக்குமார் நாடார் கல்லூரியில் 1965-ஆம் ஆண்டில் விரிவுரையாளராகச் சேர்ந்தேன். அருமையான கல்லூரி. வணிக நோக்கமின்றி சுற்றிலும் உள்ள கிராமப்புற மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கிய நிறுவனம். திரு. பி. தங்கராஜன் என்பவர் கல்லூரி முதல்வராக இருந்தார். ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் ஒரு தந்தையைப் போல அன்பு காட்டி வழிநடத்தியவர். அப்போது சம்பளம் குறைவுதான் என்றாலும் நண்பர்களோடும் மாணவர்களோடும் ஆனந்தமாக நாட்கள் சென்று கொண்டிருந்தன.

காலம் அப்படியேவா போய்விடும்? அப்போதெல்லாம் தனியார் கல்லூரி என்றால் அரசு மானியம் பெறும் கல்லூரி என்று பொருள். தற்போது பல்கிப் பெருகிவிட்ட சுயநிதி நிறுவனங்கள் அப்போது கிடையாது. அரசு மானியம் போதுமானதாக இல்லாததால், ஆசிரியர் அலுவலர்களுக்கு மாதாமாதம் ஊதியம் கொடுப்பதே பல கல்லூரிகளில் இயலாமல் போய்விட்டது. மாத ஊதியம் கிடைக்காதது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தாலும் அதை வைத்தே எங்களிடையே பல நகைச்சுவை உரையாடல்கள் நடக்கும். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவப் பெருமான் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார் அல்லவா?

Noble Profession

மேடையில் பேசும்போது அமைச்சர்கள், துணை வேந்தர்கள் எல்லாம் ஆசிரியர்களது பணி உன்னதமானது என்று குறிப்பிடுவார்கள். அது உண்மைதான். ஆனால் இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் விரக்தியாகச் சிரித்துக்கொள்வோம். வீட்டு வாடகை கேட்பவரிடம் நான் Noble Profession ஐச் சேர்ந்தவன். வாடகை தர முடியாது என்று சொல்ல முடியுமா?... பால்காரரிடம், மளிகைக் கடைக்காரரிடம் எல்லாம் Noble Profession என்று சொல்லித் தப்பிக்க முடியுமா?... என்று எங்களுக்குள் பேசிக்கொள்வோம். இதேபோல் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்று யாராவது மேடையில பேசினாலும் "எங்களை இறைவன்னே நினைச்சுட்டாங்க போல இறைவனுக்கு

சம்பளம் கொடுக்க வேண்டாம்ல?" என்று பேசிச் சிரித்துக்கொள்வோம்.

மேமெண்ட்ஸ் பலவிதம்

"பல கல்லூரிகளில் முதலில் மாத ஊதியம் தாமதமாக வரத் தொடங்கியது. பின்னர் அந்த மாதம் வராமல் அடுத்த மாதம் வரும். பிறகு, அடுத்த மாதத்திலும் வருமா, வராதா, என்றுதான் வரும் என்பது கூடத் தெரியாத நிலைமை தோன்றியது. சில கல்லூரிகளில் கையெழுத்து வாங்கிக் கொள்வது ஒரு தொகைக்கு. கவரில் வைத்துக் கொடுப்பது வேறு தொகையாக இருக்கும். சம்பளக் கவரை சகல அதிகாரமும் படைத்த கரெஸ்பாண்டண்ட் வந்து நேரில் வழங்குவார். கவரை அவர் எதிரில் பிரித்துப் பார்க்கக்கூடாது.

"பொதுவாக சம்பளப் பிரச்சனை இல்லாத எங்கள் கல்லூரியிலேயே ஒருமுறை மூன்று மாதமாகச் சம்பளம் வரவில்லை. தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தத் தீபாவளிக்கு "உன்னைக் கண்டு நான் வாட, என்னைக் கண்டு நீ வாட" பாடலைப் பாட வேண்டியதுதான் என்று எங்களுக்குள் பேசிக்கொண்டோம். தீபாவளிக்கு சில நாட்கள் இருக்கும்போது செயலாளர் எப்படியோ பணத்தைப் புரட்டி மூன்று மாத சம்பளத்தைக் கொடுத்துவிட்டார். உடனே "இந்தாம்மே பாட்டை மாத்து. உன்னைக் கண்டு நான் ஆட என்னைக் கண்டு நீ ஆட உல்லாசம் பொங்கும் இந்தத் தீபாவளி" என்று பாடலை மாற்றிவிட்டோம்!

கொடுபடா ஊதியம்

போனஸ் என்பதற்கு கொடுபடா ஊதியம் (deferred wage) என்று உச்சநீதிமன்றம் ஒரு கட்டத்தில் தீர்ப்பு அளித்தது. 1970-களில் தென்பகுதியில் இருந்த பல கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த அளவில், ஊதியம் என்பதே 'கொடுபடா' ஊதியமாகத்தான் இருந்தது!

"ஊதியத்தைக் கொடுக்காமல் ஊதாரித்தனமான வேறு பல செலவுகளைச் செய்த நிர்வாகங்களும் உண்டு. "பெற்ற தாய் பிச்சை எடுக்கிறாளாம். பையன் கும்பகோணத்தில் கோதானம் செய்தானாம்" என்ற பழமொழியைச் சொல்லி ஆசிரியர்கள் ஆதங்கப்பட்டுக் கொள்வார்கள். அரசு மானியத்தை வாங்கி ஏப்பம் விட்டுவிட்டு ஆசிரியர் அலுவலர்களைப் பட்டினி போட்ட நிர்வாகங்களும் உண்டு.

ஒரு கல்லூரியில் 20 மாதங்களுக்கு மேல் சம்பள பாக்கி இருந்தது. அந்தக் கல்லூரியில் கேரளாவிலிருந்து வந்து பணிபுரிந்த பல ஆசிரியர்கள் நிலைமையைச் சமாளித்து வந்தார்கள். ஒரு கடையில் கடன் பாக்கி அதிகம் ஆகிவிட்டதால் "கல்லூரி ஆசிரியர்களுக்குக் கடன் கிடையாது" என்று ஒரு பலகையில் எழுதி கடையின் முன் வைத்தார்கள்.

மதுரையில் ஒரு கல்லூரியில் அலுவலக மானேஜர் நகரப் பேருந்திலிருந்து இறங்கும்போது 'லெதர் பை' வைத்திருக்கிறாரா என்று ஆசிரியர் அலுவலர்கள் ஆவலுடன் கவனிப்பார்கள். கையில் அந்த "ராசியான பையை அவர் வைத்திருந்தார் என்றால் அன்று

சம்பளம் கொடுக்கப் போகிறார்கள் என்று அர்த்தம்!

உங்களுக்கு எவ்வளவு மாதம்?

ஒவ்வொரு கல்லூரியிலும் ஊதிய பாக்கிகள் ஒவ்வொரு மாதிரி இருக்கும். வேறு கல்லூரிகளில் எவ்வளவு பாக்கி என்பதை மத்திய விடைத்தாள் திருத்தும் மையங்களில் கேட்டறிந்து ஆசிரியர்கள் ஆறுதல் அடைவார்கள். இதைப்பற்றி குமுதம் இதழ் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டது. மதுரையில் விடைத்தாள் திருத்தும் மையங்களில் பேராசிரியர்கள் சந்தித்துக் கொள்ளும்போது அவர்கள் ஆண்களாக இருந்தாலும், "உங்களுக்கு எவ்வளவு மாதம்? என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொள்வார்கள். எவ்வளவு மாதம் என்று கேட்டால், எவ்வளவு மாத சம்பள பாக்கி என்று அர்த்தம்" என்று அந்த இதழ் விளக்கமும் கொடுத்திருந்தது!

போற இடத்திலும் இந்தப் பிரச்சனையா?

மாதச் சம்பளம் வராத சூழ்நிலையில் ஒரு விரிவுரையாளர் ஒரு கம்பெனிக்கு வேலை வேண்டி விண்ணப்பம் அனுப்பினார். அவர்கள் ஒரு படிவத்தை அனுப்பினார்கள். அதில் வயது கல்வித்தகுதி போன்ற விவரங்களுடன் "Salary wanted" என்று ஒரு பத்தி இருந்தது. எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறார் என்பதை விண்ணப்பம் செய்தவர் எழுதி அனுப்ப வேண்டும். நேர்முகத் தேர்வின்போது பேரம்பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள். அந்தப் பத்தியை இந்த விரிவுரையாளர் சம்பளம் வேணுமா, வேண்டாமா என்று கேட்பதாகப் புரிந்துகொண்டார். போற இடத்திலும் இந்தப் பிரச்சனையா என்று யோசித்த அவர் சம்பளம் கண்டிப்பாக வேண்டும் என்பதைத் தெரிவிக்க அந்தப் பத்திக்கு நேரே "yes" என்று அழுத்தமாக நிரப்பி அனுப்பினார்.

சம்பளத்தைக் கொடுத்துட்டுக் கேள்வி கேளுங்க!

ஓரிஸ்ஸாவில் ஒரு பள்ளியில் நடந்த சம்பவத்தை ஆசிரியர்களின் அகில இந்திய மாநாட்டுக்குப் போய்வந்த தலைவர் ஒருவர் தெரிவித்தார். அந்தப் பள்ளியில் அறிவியல் வகுப்பில் சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்று ஆசிரியர் சொல்லிக் கொடுத்திருக்கிறார். இன்ஸ்பெக்சனுக்கு வந்திருந்த அதிகாரி காதில் இது விழுந்து அதிர்ச்சியடைந்தார். ஆசிரியரை அழைத்து 'கோபர்னிக்கஸ் கலிலியோ காலத்திலேயே சூரியன் பூமியைச் சுற்றிவரவில்லை. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்று முடிவாகிவிட்டது. நீங்கள் இப்படித் தவறாகச் சொல்லிக் கொடுக்கலாமா?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு அந்த ஆசிரியர் "நான் சூரியன் பூமியைச் சுற்றிவருகிறது?" என்றோ, பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்றோ, எதுவுமே எதையும் சுற்றவில்லை என்றோ சொல்லிக் கொடுப்பேன். எனக்கு ஆறு மாதமாகச் சம்பளம் வரவில்லை. "சம்பளத்தைக் கொடுத்துவிட்டுக் கேள்வி கேளுங்கள்" என்று சொல்லி விட்டாராம்!

ஆசிரியர்கள் தெருவுக்கு வரலாமா?

சம்பளப் பிரச்சனை இப்படி வாட்டிக்கொண்டிருந்த நிலையில் அந்த வேலையாவது நிரந்தரமா என்று கேட்டால் இல்லை. எந்த நேரமும் வேலைக்கு ஆபத்து தலைமேல் தொங்கிக் கொண்டிருந்தது. அது தனிக் கதை. மருத்துவ விடுப்பு பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு எதுவும் கிடையாது. பதவி உயர்வு என்பதே கிடையாது. இப்பிரச்சனை களை முன்வைத்து 1970-ஆம் ஆண்டில் மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர் மன்றம் (Madurai University Teachers' Association - MUTA) என்ற சங்கத்தைத் தொடங்கி உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினோம். உடனே ஆசிரியர்கள் தெருவுக்கு வரலாமா என்று எங்களை சிலர் விமர்சித்தார்கள். "ஆசிரியர்கள் ஏற்கனவே தெருவில்தான் நிற்கிறோம். ஊதியத்தைக் கொடுத்து எங்களைக் கல்லூரிக்கு அனுப்புங்கள்" என்று அவர்களுக்குப் பதில் சொன்னார் சிவகங்கைக் கவிஞர் மீரா.

காசில்லாமல் அப்பா ஆனவர்

அடுத்தடுத்த இரண்டு வீடுகள் ஒரு வீட்டில் உள்ள குழந்தைகள் புத்தாடை உடுத்திப் புறப்படுகின்றன. பக்கத்து வீட்டுக் குழந்தைகள் பார்த்துப் பொருமுகின்றன. ஒரு குழந்தை கேட்கிறது, நமக்கு அப்பா இப்படி புது சொக்கா வாங்கிக் கொடுக்கிறாரா? என்ன அப்பா நம் அப்பா?"

"நம்ம அப்பா கையிலே காசு இல்லை; கிடைச்சதும் வாங்கித் தருவார்" என்று இன்னொரு குழந்தை சமாதானம் சொல்கிறது. மூத்த பையனுக்கு இந்த சமாதானம் பிடிக்கவில்லை. வெடிக்கிறான். "காசில்லாமல் இருந்தால் ஏன் அப்பா ஆகணும்? காசில்லாமல் நான் அப்பா ஆகமாட்டேன்."

இந்தக் கதையை மறைந்த கவிஞர் மீரா 1975 ஜூலை மாத மூட்டா இதழில் எழுதியிருந்தார்.

தேர்வுப் புறக்கணிப்பு - மறியல்

நாங்கள் வீதியில் இறங்கிப் போராடத் தயாராகிக் கொண்டிருந்தோம். விருதுநகரில் நாங்கள் கூட்டம் நடத்தும்போது அப்போது சி.பி.எம்.மின் ஒன்றுபட்ட முகவை மாவட்ட செயலாளராக இருந்த தோழர் எஸ்.ஏ. பெருமாள், "நீங்கள் தெருவில் இறங்கிப் போராடாமல் உங்கள் பிரச்சனை தீராது" என்று பேசியது எங்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இடதுசாரிக் கட்சியினர்தாம் எங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள் என்பதைக் களத்தில் தெரிந்துகொண்டோம். அனைத்துக் கல்லூரிகளிலும் 1977 டிசம்பரில் நடந்த தேர்வைப் புறக்கணித்து மறியல் செய்தோம். சிறையில் அடைக்கப் பட்டோம். அன்று தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். *மூட்டா* தலைவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து முக்கியமான பிரச்சனை களைத் தீர்த்துவைத்தார். ஏழு ஆண்டுகள் மனுக் கொடுத்துத் தீராத பிரச்சனைகள் ஐந்தே நாட்களில் தீர்க்கப்பட்ட அதிசயத்தைக்

கண்டோம். போராட்டம்தான் பிரச்சனைகளை முடித்துவைக்கும் என்ற ரகசியம் எங்களுக்கு முதன்முறையாகப் புரிந்தது.

Financing the Self

நாங்கள் பட்ட இன்னல்களை விடக் கூடுதலாக இன்று பணியிலிருக்கும் சுயநிதிக் கல்லூரி / வகுப்பு ஆசிரியர்கள் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். Self-financing என்பதை Financing the Self என்று வர்ணித்தார் நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணய்யர். கல்வியின் எதிர்காலமும் சுயநிதி வகுப்பு ஆசிரியர்களின் எதிர்காலமும் எப்படி அமையப் போகிறது என்பது இன்று மிகப் பெரிய கேள்வி. அன்றாவது போராட்டம் நடத்தினால் கூப்பிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தும் அரசு இருந்தது. இன்று எந்தப் போராட்டத்தையும் அரசு கண்டுகொள்ள மறுக்கிறது. மேலும் தீவிரமான போராட்டங்களை நடத்த வேண்டிய காலமாக இன்றைய நவீன தாராளமய உலகம் மாறியிருக்கிறது. இன்றைய இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டியது இதைத்தான்.

(கட்டுரையாளர்
புதிய ஆசிரியன் இதழ் ஆசிரியர்)

இனிய வாழ்த்துக்கள்

பேரா. சிவ. அழகுமுருகன், உதவி பேராசிரியர் தமிழ்த்துறை, தென்திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் அவர்களுக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், **நாஞ்சில் நாட்டு வேளாளரின் இன வரைவியல்** என்னும் பொருளில் மேற்கொண்ட ஆய்வுக்காக முனைவர் பட்டம் வழங்கியுள்ளது.

அன்னாருக்கு ***மூட்டா*** தனது வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

கிளைப் பொறுப்பாளர்கள் கவனத்திற்கு

மத்திய அமைப்பிற்கான சந்தா மற்றும் சேம நல நிதி சந்தா வங்கியில் செலுத்துவதற்கு:

இந்தியன் வங்கி, போடி நாயக்கனூர்

மூட்டா கணக்கு எண் (MUTA Subscription) **6119808455**
மூட்டா உறுப்பினர் நல நிதி (MUTA Welfare Fund) **6119808852**
IFSC Code : IDIB000B042

மத்திய அமைப்புக்கான சந்தா மற்றும் சேம நல நிதி சந்தா நேரடியாக (Online இல் NEFT மூலம்) செலுத்துவோர், செலுத்திய விவரத்தை கீழ்வரும் முகவரிக்கு தெரிவிக்கவும்:

பேரா. R. பாண்டி (மூட்டா பொருளாளர்)
23/11, 8-வது வார்டு, மல்லையன் தெரு
போடி நாயக்கனூர், தேனி மாவட்டம். **கைபேசி: 94431 80598**

One Day Strike On September 02, 2015

- Let us Defeat Anti People, Anti Working Class Policies of the Central Government.
- Let us Make the One Day Strike a Historic Success.

MUTA

மூட்டா
மூன்றாவது கல்வி மாநாடு...

நம் மன்றத்தின் மூன்றாவது கல்வி மாநாடு 2015 செப்டம்பர் 26 சனிக்கிழமை நாகர்கோவில், சுங்கான்கடை ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி அரங்கில் நடைபெறுகிறது. இக்கல்வி மாநாட்டின் கருப்பொருள்ஞ Contemorary Issues in Higher Education. மூட்டா நான்காம் மண்டலம் இம்மாநாட்டைப் பொறுப்பேற்று நடத்துகிறது.

கல்வி மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெறவுள்ள கருத்தரங்குக்கு பின்வரும் பொருள்களில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப் படுகின்றன:

- Curriculum development in higher education.
- Democratisation in higher education.
- Social control over higher educational institutions.
- Access, equity and excellence in higher education.
- Teaching, research and extension in higher education.
- Secular higher education
- Funding in higher education.
- Corruption in higher education
- Administrative issues in higher educational institutions.

கட்டுரைகள் Times New Roman 12 எழுத்துருவில், A4 அளவில் Single space, justified அமைப்பில், 6 பக்கங்களுக்கு மிகாமல் அமைந்திருக்க வேண்டும். கட்டுரைகள் நகலாகவோ தழுவலாகவோ இல்லாமல் சொந்த ஆக்கமாகவும் அசலானதாகவும் இருக்கவேண்டும். முழு கட்டுரை அனுப்ப இறுதிநாள் 10.09.2015. கட்டுரைகளை மின்னஞ்சலில் அனுப்பவும்:

muta3rdacademicconference@gmail.com

கல்வி மாநாட்டுக்கான பேராளர் கட்டணம்:

உதவி பெறும் ஆசிரியர்களுக்கு - ரூ. **200/-**

சுயநிதி ஆசிரியர்களுக்கு - ரூ. **50/-**

மாநாட்டில் சங்கமிப்போம்!

VS MEMORIAL DAY 13.07.2015
Thirunelveli

MUTA CADRE ORIENTATION CAMP MAY 5,6-2015

சசிபெருமாள்

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகிலுள்ள உண்ணாமலைக்கடை ஊரில் அமைந்திருந்த ஒரு டாஸ்மாக் மதுக்கடையை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அகற்றாது மெத்தனமாயிருந்த நிர்வாகத்தைக் கண்டித்து 2015 ஜூலை 31 அன்று நடந்த போராட்டத்தில் காந்தியவாதி சசிபெருமாள் மரணமடைந்திருக்கிறார். இன்னும் பல்லாண்டுகள் சமூகத் தீமைகளுக்கெதிரே போராடியிருக்கவேண்டிய **சசிபெருமாளின்** மதிப்புமிகு உயிர் இப்படி திடீரென்று பிரிந்துவிடும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. மதுவுக்கெதிராக அவர் பற்றவைத்த நெருப்பு தமிழகத்தில் கொளுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கிறது.

தீ பரவட்டும்!

PRINT POINT 04652 234396